
வேடிக்கை
இருவார இதழ்
21-08-2005
ரூ. 30.00
நலமாய் மீண்ட
நாஸாவின் நம்பிக்கை
வியக்க வைக்கும்
விஜயகாந்த்
செத்தும் கெடுத்தான்..

# வேடிக்கை
## இருவார இதழ்

ஒரு முறை வாசித்துபாருங்கள்

- வேடிக்கை

அதுவே ஆகிவிடும் உங்களுக்கு

- வாடிக்கை

சிறுகதை, சரித்திரத் தொடர், த்ரில் தொடர்,
சமூகத் தொடர்,
கவிதை, கட்டுரைகள், துணுக்குகள்,
ஆன்மீகம், தகவல்தொழில் நுட்பம்,
அறிவியல், மருத்துவம்,
சுமூகப்பிரச்சினைகள், கேள்விபதில், போட்டிகள்,
சிறுவர் பகுதி,
நகைச்சுவைகள், இணையப்பகுதி என அனைத்தையும்
கொண்டு வருகிறது வேடிக்கை

இதுவரை காலமும்
ஈழத்தில் இல்லாத ஒன்று
உங்கள் கரங்களில்.............

வேடிக்கை படியுங்கள்
வாடிக்கை ஆகுங்கள்

நாடு முழுவதும் விநியோகத்தர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

0714 801391

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை

இருவார இதழ்

கொண்டாட்டம் 01 கூத்து 02

## விமர்சகர்

வளைவை வளைவன்

ஒரு [illegible]த் தீவில் தொடர்

## இருளின் நாயகர்கள்

## 5 இல் ஐந்து

## நலமாக மீண்ட நாஸாவின் நம்பிக்கை

சிறப்புக் கட்டுரை

## முராரி...

## இளையவர் பக்கம்

—அபிமானியின் பார்வையில்—

## இந்தியன் ஒயில் கிண்ணம்

இறுதியாட்டம்

வாரம் விட்டு வாரம் உங்கள் வாசல் வரும் வசந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை

இருவார இதழ்

21-08-2005


## வணக்கம்

ஹாய்! ஹாய்! ஹாய்!

பூமியில் ஜனித்த புதிய உயிர் ஒன்று புதுமலர்ச்சி பெற்றுத் தன் அடுத்த பரிணாமத்தை ஆரம்பித்தது!

ஆம், உங்கள் அபிமான 'வேடிக்கை' உங்கள் ஆதரவுடன் தனது வளர்ச்சிப் பாதையில் வீறுடன் வைக்கும் இரண்டாவது காலடி.

'வேடிக்கை'க்காக பத்திரிகையில் வெளிவந்த வேடிக்கை எமக்குப் பல உள்ளங்களை 'வாடிக்கை' ஆக்கியிருக்கின்றது. 'நாங்கள் என்னமோ ஏதோ? ' என்று எண்ணத் தொடங்கியதில் 'வேடிக்கை' இப்படி அமைந்தது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்று சிகரம் நோக்கிய பயணங்களின் முன்னோடிகள் உளம் நெகிழ்ந்தமை எமக்கு ஒரு புத்தூக்கி.

காத்திரமான களம் ஒன்று கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் சுவைஞர்களுக்கு வேண்டும் என்ற உத்வேக உந்தல், உங்கள் படைப்புக்கள் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வந்த வரத்தில் மேலும் உரமேறியிருக்கின்றது.

பக்கங்கள் கூடப் பலமும் கூடிப் படைப்புக்களும் கூடி, காலம் கூடி, வேளை கூடி, வேடிக்கை உங்கள் கைகளுக்கு வருகின்றது ஓடி. ஆனாலும் இந்தப் பயணத்தில் நாம் சந்திக்கின்ற தடைகள் ஏராளம். அவற்றை எல்லாம் வெறுமனே வேடிக்கை பார்க்காது உங்கள் கரங்களில் தவழும் வேடிக்கை மேலும் தரமுற ஒத்துழைப்பீர்கள் என்ற எதிர்பார்ப்பில் மீண்டும் ஒரு இதழில் உங்களைச் சந்திக்கும் வரை ...

அன்புடன் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெளிநாட்டுக் காசைக் கரியாக்கும்
இன்றைய யாழ்ப்பாணம்

# வேடிக்கை வெளியீட்டு விழா



வேடிக்கை இதழின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் செங்கை ஆழியான் அவர்கள் உதயன் பிரதம ஆசிரியரிடம் வழங்குகிறார்.



07-08-2005 அன்று நடைபெற்ற வேடிக்கை வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த விருந்தினர்கள் திரு கானமயில்நாதன் (உதயன்), திரு இராதையன் (நமது ஈழநாடு), வணபிதா ரூபன் மரியாம்பிள்ளை (பாதுகாவலன்) மற்றும் செங்கை ஆழியான்ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாக மீண்ட நாஸாவின் நம்பிக்கை

## சிறப்புக் கட்டுரை

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து அனுப்பப்பட்ட டிஸ்கவரி விண்கலம் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள எட்வார்ட் விமானப்படை தளத்தில் இம்மாதம் 9 ஆம் திகதி பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

7 வீரர்களுடன் அனுப்பப்பட்ட டிஸ்கவரி விண்கலம் அன்றைய தினம் இலங்கை நேரப்படி பிற்பகல் 06.12 மணிக்கு தரையிறக்கப்பட்டது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் அனுப்பிய டிஸ்கவரி விண்வெளி, விண்ணில் ஏவப்பட்டபோதே அதன் வெப்பத் தடுப்புத் தகடுகள் உடைந்துவிட்டன. எனினும் விண்கலம் வெற்றிகரமா விண்ணில் ஏவப்பட்டு விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தோடு இணைக்கப்பட்டது.

பின்னர் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்ய விண்வெளி வீரர் ஸ்டீபன் ராபின்சன் விண்ணில் 3 முறை தொடர்ந்து கோளாறை சரி செய்தார்.

வெப்பத் தடுப்புத் தகடுகளுக்கு இடையே உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக வைக்கப்பட்டு இருந்த துணி கிழிந்து போய் விண்லகத்தை விட்டு வெளியே தொங்கியது. இது இப்படியே தொங்கிக் கொண்டு இருந்தால் விண்கலம் பூமிக்குத் திரும்பும்போது வெப்பம் அதிகமாகி விண்கலம் வெடிக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சப்பட்டது.

இது குறித்து விண்வெளி வீரர்கள் ஆய்வு செய்தனர். அந்த ஆய்வுக்குப் பின் அதனால் விண்கலத்திற்கு ஆபத்து ஏற்படாது என்று தீர்மானித்தனர்.

8 நாட்கள் விண்வெளியில் தங்கிய விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்ப முடிவு செய்தனர். இதனையடுத்து சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து விண்கலம் துண்டிக்கப்பட்டு அது விண்ணில் இருந்து புறப்பட்டு திங்கட்கிழமை பூமிக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னுமாக மாறியும் வேகம் மணிக்கு 300 கி.மீ. வீதம் குறைக்கப்பட்டது.

8ஆம் திகதி இலங்கை நேரப்படி 2.47 மணிக்கு புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தில் தரை இறங்கும் எனத் திட்டமிடப்பட்டது. இந்நிலையில் மோசமான வானிலை காரணமாக டிஸ்கவரியை தரை இறக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. 90 நிமிடம் தாமதமாக இறங்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் 90 நிமிடம் கழிந்த பிறகும் மேக மூட்டம் விலகவில்லை. இதனால் விண்கலம் பூமியில் இறங்குவது மேலும் ஒரு நாள் தள்ளிவைக்கப்பட்டது.

விண்கலம் எந்த ஆபத்தும் இன்றி பத்திரமாக பூமிக்குத் திரும்பும் என்று நாசா விஞ்ஞானிகள் காத்திருந்தனர்.

கடந்த மாதம் 26ந் தேதி புறப்பட்ட டிஸ்கவரி விண்கலம் 12 நாட்கள் விண்வெளியில் இருக்கும் என்று திட்டமிடப்பட்டிருந்தது. பிறகு அது ஒரு நாள் நீடிக்கப்பட்டது. 13 நாட்களுக்குப் பின்னர், கடந்த 6ஆம் திகதி விண்கலம் பூமிக்கு புறப்பட்டது.

விண்கலம் மணிக்கு 25 ஆயிரம் கி.மீ. வேகத்தில் பூமியை நோக்கி பயணித்தது. இதே வேகத்தில் வந்தால் விண்கலம் பூமியில் மோதிவிடும் என்பதால், விண்ணில் அது தலைகீழாகத் திரும்பியும், முன்னும்

பூமியில் இறங்குவது மேலும் ஒரு நாள் தள்ளி வைக்கப்பட்டதால், விண்கலம் புவி வட்டப்பாதையில் சுற்றி வந்துகொண்டிருந்தது. அது காற்று மண்டலத்துக்குள் பத்திரமாக நுழைந்துவிட்டால் வெற்றிகரமாக தரை இறங்கிவிடும். எனினும், விண்கலத்தில் ஒரு நாள் மட்டுமே பறக்க எரிபொருள் இருந்தது. எனவே அதற்குள் விண்கலம் தரையிறங்கியாக வேண்டிய கட்டாய நிலை நாஸாவிற்கு ஏற்பட்டது.

இதனையடுத்து நாசாவின் கடுமையான முயற்சியின் பின்னர் விண்கலம் பாதுகாப்பாக தரையிறங்கியது. இது குறித்து நாசா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

கிராமமொன்றில் புதிய கோவில் ஒன்று கட்டிக்கொண்டிருந்தனர். கூலியாட்கள் சிலர் அதற்காகக் கல் உடைத்துக் கொண்டிருந்தனர். பெரியார் ஒருவர் அவ்வூருக்கு விஜயம் செய்தார். கோவில் வேலை நடக்கும் இடத்திற்குச் சென்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு கூலி ஆளைப் பார்த்து "நீ என்ன செய்கிறாய்" என்று கேட்டார், "தெரியவில்லையா? கைநோக க்கல் உடைக்கிறேன்" என்றான் அவன்.

சிறிது தூரம் சென்று பெரியார் வேறொரு கூலியாளை அதே கேள்வியை கேட்டார். "ஐயா, வயிற்றுப்பிழைப்புக்காக ஓயாது உழைக்கிறேன்" என்றான் அவன். இன்னமும் அப்பால் சென்று மூன்றாவது ஆள் ஒருவனையும் அதே கேள்வியைக் கேட்டார் பெரியார். "சாமி, ஏதோ கொஞ்சம் ஆலயப்பணி செய்கிறேன், இடம் கடந்த இறைவனுக்கோர் இடம் கட்டும் இம்முயற்சியில் அடியேனுக்கும் ஒரு பங்கு கிடைத்தது" என்றான்.

+++++

மூவரும் கூலியாட்கள்தான். ஆனால் தன் வேலையைப்பற்றி ஒவ்வொருவரும் ஒரு தனி மனப் பான்மையைக் கொண்டிருந்தனர். முதல்வனுக்கு அத்தொழில் வேண்டா வெறுப்புடன் செய்யப்பட வேண்டிய வேலை எனப்பட்டது. இரண்டாமவன் அது வயிற்றுப் பிழைப்புக்கொரு வழியென மட்டும் உழைத்தான். மூன்றாமவன் தன் தொழிலை இறைபணியாகக் கருதினான். இதுவே கிரஹஸ்தர்களாக வாழும் நாம் பின்பற்ற வேண்டிய வழியாகும். எதைச் செய்தாலும் அதனை ஆண்டவனுக்கே செய்கிறோம் என்ற எண்ணம் எம்முள் வேரூன்றி நிற்கட்டும்.

ஆராத்யர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்னவள் ஒரு ஜடம்

நான் அவளைப்
பார்க்கிறேன்,
அவள் என்னைப்
பார்க்கிறாள்.
என் உதடுகள்
மொழிகின்றன,
அவள் உதடுகள்
மொழியவில்லை
என் இமைகள்
இமைக்கின்றன,
அவள் இமைகள்
இமைக்கவில்லை
என்னை நான்
கிள்ளிப் பார்க்கிறேன்
நிஜத்தில்தான் இருக்கிறேன்....
சிரித்துக் கொண்டேன்......
அவளும் கூட சிரித்தாள்
நெடுநேரமாய் என்னை பார்த்து...
அந்த புகைப்படத்தில் இருந்தபடி......!!!



ஆரபி.
உடுப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலஞ்சென்ற கதிர்காமர்...



சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவு இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிறப்பில் ஒரு தமிழரான இவர் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பெரும் இடைஞ்சலானவராகவே காணப்பட்டார்.

இவர் அரசியலில் கூடுபட்ட காலப்பகுதியில் இவரது செயற்பாடுகள் தொடர்பான ஒரு தொகுப்பே இதுவாகும்.

-ஊர் உலாத்தி

1990களின் இறுதியில் சந்திரிகா சமாதானப் புறாவாக வேசமிட்டுத் தேர்தல் களமிறங்கி பெரும் மக்கள் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய போது நாட்டின் அதிமுக்கிய பதவிகளில் ஒன்றான வெளியுறவு அமைச்சர் பதவிக்கு முன்பின் அரசியல் அரங்கில் அடிபடாத பெயருக்குரிய புதுமுகமான லக்ஸ்மன் கதிர்காமரை நியமித்த போது தமிழ் மக்கள் மூக்கில் விரலை வைத்து வியந்தே போயினர். சந்திரிகா உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை வழங்குவார் என்றே நம்பினர். ஆனால், வரலாறு வேறு விதமாகவே இந்தப் பதவி நியமனத்திற்கான காரணத்தை பதிந்து வைத்துள்ளது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி அதனைப் பயங்கரவாத நடவடிக்கையாக உலகிற்குப் பிரசாரம் செய்துள்ள சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தவும், விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிக்கவும் ஒரு தமிழரைப் பயன்படுத்த நினைத்த சதியின் காரணமாகவே கதிர்காமரின் அந்த நியமனம் அமைந்தது. தமிழர் கையைக் கொண்டே தமிழர் கண்ணைக் குத்தும் திட்டத்தைப் பொறுப்பேற்ற கதிர்காமர் அப்போது அமைச்சரானார்.ஜனாதிபதிக்கு விசுவாசமாக, பதவிபக்தியோடு கதிர்காமர் செயற்பட்டதன் காரணமாக ஆட்சி மாறியதும் ஜனாதிபதி அவரைத் தனது ஆலோசகராக நியமித்ததுமல்லாமல் ஒரு அமைச்சருக்கான பாதுகாப்பு உட்பட சகல வசதிகளையும் செய்து கொடுத்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை காலத்திலும் ஜனாதிபதியின் குரலாக, சமாதான நகர்வுகளுக்கு எதிரான கருத்துக்களை (தெளிவாகக் கூறுவதனால் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கத் தூண்டும் பிரசாரங்களை) தீவிரமாக்கினார். குறிப்பாக இந்தியாவை சமாதான முயற்சிகள் மீது எரிச்சல் கொள்ள வைக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950களின் நடுப்பகுதியில் இலங்கை சட்டக்கல்லூரியில் அதிதிறமைச் சித்தி பெற்ற லக்ஸ்மன் கதிர்காமர் 1950களின் இறுதியில் லண்டன் சென்று ஒக்ஸ்போட்டில் தன்னை இணைத்துக் கொண்டார். அதன் பின்னரான காலத்தில் லண்டனில் வழக்கறிஞராக கடமையாற்றிய கதிர்காமர் 1970களின் ஆரம்பத்தில் உலகத் தொழிலாளர் அமைப்பின் ஆலோசகராக கடமையாற்றிய பின், அனைத்துலக அறிவுப் பிழைப்பாளர்கள் காப்புரிமை அமைப்பின் இயக்குநராக 1988 வரை கடமையாற்றினார்.



இக்கால கட்டத்திலான இவரது மேற்கத்தைய அனுபவத்தை சிங்களத்தின் தேவையையொட்டிப் பயன்படுத்துவதற்கான சந்திரிகாவின் எண்ணப்பாடே தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக 62 வயதில் கதிர்காமரைப் பதவியில் அமர்த்தியது. இவ்வாறு அரசியலுக்குள் தன்னை நுழைத்துக் கொண்ட கதிர்காமர், தனது மேற்குலக அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழர் தரப்பு மீதான மேற்குலகின் பார்வையை தலைகீழாக மாற்றும் நடவடிக்கையை மிகக் கச்சிதமாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினார். அத்துடன் சிறிலங்கா வெளிவிவகாரத் துறையின் புதிய பரிமாணத்திற்கும் வித்திட்டார்.

சிறிலங்கா விமானப்படையினரால் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மந்துவிலில் 1999ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்ததை ஐக்கியநாடுகள் சங்கத்தின் மனித உரிமைகள் சங்கம் கண்டனம் வெளியிட்டதை எதிர்த்து கதிர்காமர் ஐ.நா.வில் நிருபர்களைச் சந்தித்துக் கண்டித்தார். இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதை விடுத்து, ஐக்கிய நாடுகள் தனது நடவடிக்கைகளை மலேரியா மற்றும் நுளம்பு குறித்த விடயங்களில் கவனம் செலுத்தும் விதத்தில் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார். இவ்வாறு ஐ.நா அமைப்பை கதிர்காமர் விமர்சித்தமையானது அந்நேரத்தில் பெரும் சர்ச்சைக்குரியதொன்றாக அமைந்தது. வெளிவிவகார அமைச்சராக இல்லாது சந்திரிக்காவிற்கான ஆலோசகராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் தாம் பதவியில் அமர்ந்தால் சமாதான செயற்பாடுகளிலிருந்து நோர்வேயின் தலையீடு முற்றாக நீக்கப்படுமென JVP தலைவர் சோமவன்ச அமரசிங்கவிற்கு வாக்குறுதி அளித்திருந்தார். சமாதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளில் நோர்வேயைப் புறந்தள்ளி இந்தியாவை உள்நுழைக்கும் முயற்சியில் கதிர்காமர் (மிகத் தீவிரமான இராஜதந்திர முயற்சிகளில்) ஈடுபட்டு வந்தார். அண்மைக்கால இந்திய விஜயங்களின் நோக்கங்களும் இதற்கமைவாகவே அமைந்திருந்தன. இவரின் இந்திய விஜயத்தின் போது சிறிலங்கா இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவது, சமாதான முயற்சியில் இந்தியா பங்குகொள்வது போன்ற கருத்துக்களே இவரால் முன்வைக்கப்பட்டன.



கதிர்காமர் தன்னை ஒரு தமிழன் என இனங்காட்டிக் கொள்வதைவிட தன்னை ஒரு சிறிலங்கன் எனக் காட்டிக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்து வந்துள்ளார். இது இவரை மேலும், மேலும் சிங்கள மக்களுடன் நெருக்கமானவராக ஆக்குகின்றது. சிறிலங்கா இராணுவம் யாழ்.குடாநாட்டை 1995ஆம் ஆண்டின் இறுதியில் கைப்பற்றிய சமயம் ஐந்து இலட்சத்திற்கு மேலானவர்கள் வன்னியில் அகதிகளாக மாறி மரத்தின் கீழ் உணவின்றி வாழ்ந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஐ.நா. செயலாளராக இருந்த பூட்ரோஸ் காலி சர்வதேச சமுதாயத்தை இலங்கை தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கும், கஸ்டத்திற்கும் உதவி புரியும்படி ஒரு இதயபூர்வமான கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையை இது உள்நாட்டு விடயம் எனக் கூறி நிராகரித்த பெருமை கதிர்காமருக்கே உரியது. தமிழ் அகதிகளுக்கு வெளிநாட்டவர்கள் மனிதாபிமான முறையில் உதவி புரிய வந்ததம்கூட தடுக்கப்பட்டது.

1995 யூலையில் நவாலி தேவாலயத்தில் குண்டுவீசி அங்கு தஞ்சம் அடைந்திருந்த மக்களை மரணமடையச் செய்வதற்குப் பொறுப்பாக இருந்த விமானப்படையின் செயலை சர்வதேசத்திற்கு செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துக் காட்டியது. அதற்காக அமைச்சர் கதிர்காமர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

இவர் ஒரு தமிழ் மந்திரியாக இருந்தும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை இனச் சுத்திகரிப்பு மற்றும் கொடூரமான மனித உரிமை மீறல்கள் பற்றி சிறிலங்காவிலோ அல்லது பிறநாட்டிலோ ஒரு சந்தர்ப்பத்திலாவது இவர் குரல் கொடுக்கவில்லை. எனவேதான் தமிழ் சமுதாயம் இவருக்கு சிறிலங்காவிலோ அல்லது பிறநாட்டிலோ ஒருவரவேற்பும் கொடுக்கவில்லை.

இவரது இறுதிக்காலத்தில் இவரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்ப் பிரசாரங்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்தன என்பது அவரளவில் வேதனையான ஓர் விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A2Z COM.COM IT ZONE

Point Pedro Road, Kodikamam.

- Computer Education
- DTP Works
- Graphic Designing
- Photo, Video Editing
- Screen Printing
- Stationaries
- Internet Calls
- CD Writting & Sales



**We are with you For You**

# A2Z JOB AGENTS & MANPOWER CENTRE

**வேலையாட்களுக்கான தேவைப்பாடு**

**வேலையின்மை நிலைப்பாடு**

**இவை இரண்டுக்கும் ஒரு இணைப்புத் தீர்வு.**

**உங்கள் தேவைகளுக்காக நாங்கள் இருக்கிறோம்.**



அழையுங்கள்:

0777 447 969

எமது முகவரி :

பஸ் நிலைய அருகாமை,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பகுதியில் தொடர்

# இருளின் ராஜாக்கள்

-ஜேனா

வந்து கொண்டிருந்த மனிதர்களும் சாதாரணமாகப்படவில்லை. ஒவ்வொருவர் உடலும் சில நூறு கிலோ எடைகளை தாங்கியே வந்தன. சிறுசலனங்களின் அரவம் கேட்டே அவை வந்திருக்க வேண்டு விளக்கொளியைப் பாய்ச்சி ஆராய்ந்தபின் வந்தவழியே அவை திரும்பி நடக்க, இதற்குள் தம்மை ஆசுவாசப்படுத்தி கொண்ட ஏழு உருவங்களும் மறைவுகளில் இருந்து வெளிப்பட்டன. முன்னால் வந்த உருவம் விரலினால் காட்டிய சைகைகளுக்கேற்ப மின்னலென மற்றைய உருவங்கள் செயல்பட்டு, தத்தமக்கென ஒதுக்கப்பட்ட இலக்குகளை நோக்கி நகரத் தொடங்கின. இரவைப் பகலாக்கும் விளக்கொளியில் உடலை துரும்பாக்கும் எடைகளுடன், மூர்க்கத்துடன் நிழல்களின் மறைவுகளூடே நகர்வுகள் நடந்து கொண்டிருந்தன.

குழுவின் தலைவன் தன் தொலை கருவியை உயிர்ப்பித்தான். "ராபர்ட், முடிஞ்சுதா என்ற தலைவனின் கேள்விக்கு நகர்வுகளினுடே மின்சாரம் பாய்ச்சப்பட்ட வேலியை அதற்குள் அண்மித்து விட்ட, "ராபர்ட்" என தலைவனால் விழிக்கப்பட்ட அவ் உருவம் "2 நிமிடம் பொறுங்கள்" என பதிலளித்தது.

சில விநாடிகளின் ராபர்ட் மின்வேலியை கச்சிதமாக துண்டித்து உள்ளே நுழைய வழியேற்படுத்தினான். மீண்டும் தொலை கருவிகளின் உதவியோடு ஆங்காங்கே நிலைபெற்றிருந்த ஏனைய உருவங்கள் ஒவ்வொன்றாக உள்நுழைந்து தம்மை நிலைப்படுத்திக் கொண்டன.

இறுதியாக ராபர்ட்டும் உள் நுழைந்து பழையபடி மின்வேலியை சீர்படுத்திவிட்டு முன்சென்றவர்களின் தடயங்களை அழித்தபடி பின்புறமாக நகர்ந்தவண்ணம் தன் நிலையை அடைய சுற்றிச் சுழன்ற தேடுதல் வெளிச்சம் அவனை நோக்கி வீசியது.......

உங்களை நோக்கி அடுத்த இதழில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'லவ்'வியம்!
- ஏ.எஸ்.பாரதி
உதடுகள்
உருவாக்கத்தில்
ஒரு புதிய சிம்பொனி -
அவள்
பெயர் !
அவள்
வார்த்தைகள்
என்
செவிகளில்
பாடல்களாகிவிடுவதால்...
தம்புரா வாசிக்கிறது
இதயம் !
காதல்
ஆலாபனையில்
மீட்டும்
கருவிகள் நாம்;
ஸ்வரம் -
காதல் !
தீபன்

# செல்லும் இடமெல்லாம்

## 2

**கா**லை 10.30

யாழ் மண்ணின் இதமான குளிர்மையைச் சூரியக் கதிர்கள் சுட்டுக் கொண்டிருந்தன. டானியல் மெமோரியல் இன்ஸ்ரிரியூட்டின் கொட்டில்களில் 16+ களும் 17+ களும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. பல ரியூட்டரிகளின் விளம்பரப் பலகைகளில் பெயர்களைப் பொறித்தவர்களுடைய குரல்கள் கலந்து ஒலித்தன. 2007(உ/த) பிரிவுக்கு பொது தகவல் தொழில்நுட்ப வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிலவு.கொம் இன் IT பிரிவு ராஜ் புறோகிறாமிங் நுட்பங்கள் பற்றி வளவளத்துக் கொண்டிருந்தான். 250 ரூபாவைக் கொட்டிய கட்டாயம் கொட்டிலில் தலைகள் நிமிர்ந்தும், நித்திரையில் சரிந்தும் பரவியிருந்தன.

மூன்றாவது வரிசையின் இரண்டாவது வாங்கு. வானத்துத் தேவதை வையத்தில் இறங்கி வாங்கில் அமர்ந்ததோ? இது நனவு தானோ? என எண்ண வைக்குமாப்போல் 'திவ்யா' அமர்ந்திருந்தாள்.

காலையில் நிகழ்ந்த விபத்தில் ஏற்பட்ட கலக்கம் முகத்தில் சிறிது கருமை பூசியிருந்தது. செந்நிறச் சுடிதார் அவள் மேனிக்கு இயற்கைச் செம்மை பூசியது. அருகில் இருந்த 16களை எல்லாம் நிலவை கண்டு ஒதுங்கும் நட்சத்திரங்களாக்கி யிருந்தாள்.

ராஜ் IT விளக்கத்தில் மூழ்கியிருக்க, பின் வரிசையில் இருந்த இரண்டு கண்கள் மட்டும் திவ்வியாவை மேய்ந்து கொண்டிருந்தன. பார்வையின் உறுத்தல் அவளை நெளியச் செய்துகொண்டிருந்தது. முன்னால் விட்டிருந்த இரட்டைப் பின்னலைத் தூக்கிப் பின்னால் விட்டுக் கொண்டவள் வகுப்பில் கவனம்செலுத்தப் போராடிக் கொண்டிருந்தாள்.

"புறோகிராமிங்" என்பது கணனியின் செயற்பாடுகளை எமது இஷ்டத்துக்கு மாற்றியமைத்துக் கொண்டு செயற்படுத்த உதவும். சில சந்தர்ப்பங்களில் பாஸ் வேர்ட்களை கண்டறிய அல்லது உடைக்கவும் கூட பயன்படுகின்றன" என்று ராஜின் குரல் ஒலித்தது.

திவ்யாவை மேய்ந்த விழிகளில் சலனம். அந்தப் பார்வைப் புலனைச் செவியுணர்ச்சி தடைப்படுத்த அவன் எழுந்தான். 17+ இல் இருந்தான். *Power Gym* இன் புண்ணியத்தில் 6 அடி 5 அங்குலத்தை புஷ்டியாக்கியிருந்தான். அதை விளம்பரிக்க, ரிசேட்டினுள் புகுத்தியிருந்தான். தலையில் சிகையலங்கார நிபுணர்கள் இஷ்டத்துக்கு விளையாடியிருந்தார்கள்.

'டவுட் பிளீஸ்'

குரல் கொடுத்தான். மொத்தத் தலைகளும் இவன் பக்கம் திரும்ப சிறியதொரு கண்காட்சியானான்.

"யெஸ். யூ ஆ வெல்கம்"

"புறோகிராமிங் மூலம் கணனிகளின் பாஸ்வேட்டை உடைக்க மட்டும் தான் முடியுமா?"......

..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கமோன் யூ கறி ஒண்!, ஏன் தயங்கிறீங்க'

''இல்லை சேர், சில கன்னிகளின் பாஸ்வேர்ட்டையும் உடைக்க லாமோ''..............

கொட்டில் ஒரு நிமிடம் கலகலத்தது.

16 + களும் 17+ களும் ஒரு முறை 'கொல்' லினார்கள்.

''ஐ ஆம் சொறி'' ராஜ் சினந்திருந்தான்.

''எனக்கு அது விடயத்தில் அறிவு போதாது. நான் கணனிகளோடு மட்டுமே பழகியிருக்கிறேன்''

''றியலி சொறி''

பதிலில் விஷமும் சினமும் இருந்தது.

கேள்வி கேட்டவன் கொட்டில் வாங்கிற்கு மீண்டும் நிறையானான். மீண்டும் அனைவரின் பார்வைக்கும் பொருளாயினான். அந்த வீச்சுகளில் துளாவியவன் திவ்யாவின் பார்வையோடு நேரித்தான். விழி கலந்தான். ஒரு வெட்டு வெட்டினான்.

திடுக்கிட்டுப் பார்வை விலத்தினாள். திவ்யாவின் வயிற்றுக்குள் புளி கரைந்தது. அனர்த்தமான பயம் உளவே பிரசன்னமாகத் தொடங்கியது. அவனைப் பற்றி மாணவர்கள் ஒருவித பயத்தோடுதான் கதைப்பார்கள். வசதியான குடும்பப் பின்னணி. ஒருமுறை ரியூசனுக்கே Land rover இல் வந்தது அனைவரையும் கப்சிப் ஆக்கியிருந்தது. வெறும் 'மாணவ ரௌடி' என்று மட்டும் எண்ண முடியாத நிலை அவனுடையது. அவன் பார்வையின் தொனி ஏதேதோ அர்த்தங்கள் சொன்னது.

''கடவுளே ஏதேனும் பிரச்சனை ஆகிவிடாமலிருக்கவேணும்'' மனதினுள் விண்ணப்பித்தாள்.

இந்த மனப்போராட்டம், காலத்துளிகள் கடந்ததை தற்காலிகமாக இவளுக்கு ஒளித்துவிட்டது. வகுப்பு நிறைவுபெற்று மாணவர்கள் கலகலத்த ஒலி அவள் கவனத்தைப் புறவுலகு ஈர்த்தது. அவன் என்ன செய்கிறான் முதுகில் குறுகுறுக்க திரும்பியவள் திகைத்தாள். அவன் வலதுகை சுட்டுவிரலால் உதடுவழித்து அந்நியன் 'றெமோ' ஸ்ரைலில் முத்தம் பறக்க விட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று முகத்தைத் திருப்பி கொண்டவள் விடுவிடுவெனக் கொட்டிலை விட்டு வெளியே வந்தாள்.

வரிசையாயிருந்த சைக்கிள்களில் தனது லேடிபோட்டை தெரிந்தவள் வீதியில் விரையத் தொடங்கினாள். அவள் அபிநய விழிகள் கலக்கத்தோடு வீதியைச் சல்லடையிட வேறு புலன்கள் ஓய்வுக்கு வந்தன. தன் பின்புறம் தொடர்ந்து வந்த கரிஷ்மா ரக மோட்டார் சைக்கிளைப் பற்றியே அறியமாட்டாதவளாக ஆரியகுளம் சந்தியால் திரும்பி பருத்தித்துறை வீதியில் நேரித்தாள்.

கரிஷ்மாவும் நிஜத்தைத் தொடரும் நிழலாக அவளைத் தொடர்ந்தது.முகத்தை மறைத்த தலைக் கவசம் அணிந்த ஒருவன் இவளைத் தொடர்தைத் தெருவே வேடிக்கை பார்த்தது. நம்மவர்களின் நல்ல பண்புகளில் ஒன்றான நமக்கேன் வம்பு என்ற பண்பு அவன் தொடர்வுக்குப் பெரும் உதவியா கியது.

திவ்வியா அரசடி வீதியைக் கடந்து பாரதி சிலையடியாற் போகும் குறுக்கொ ழுங்கையில் இறங்கினாள்.

அவ்வீதி அண்மையிற் திருத்தப் பட்டுத் தார் ஊற்றப்பட்டு மண்ணால் மூடப்பட்டிருந்தது. செல்லும் வாகனங்கள் எல்லாம் தம் பங்குக்கு அருகில் நின்ற மரங்களுக்கும் அண்மித்த வீடுகளுக்கும் வெள்ளையடித்துக் கொண்டு சென்றன. இது தெருவில் செல்வோரின் கண்களில் நீரை வரவழைத்துக் கொண்டிருந்தது. நல்லூர்த் திருவிழாக் காலம் என்பதால் குறுக்கு வழிக்காக அவ்வழியால் திரும்பிய ஹைஏஸ் வாகனம் ஒன்ற புழுதி வாரி விட்டு விரைய.....

பின்னே யாருமில்லாத அந்தச் சமயம் கரிஷ்மாவில் வந்தவன் திவ்யாவை ஓவர்ரேக் பண்ணுவது போல் பாவலா காட்டினான்.

அளவோடு பிரமன் அமைத்திருந்த அவள் பின்னழகுகளில் அறைந்து விட்டு ஆர்முடுகினான். திடீரென நேர்ந்து விட்ட இந்த நிகழ்ச்சியால் திவ்யா நிலை குலைந்து சரிந்தாள். நினைவிழந்தாள். கணக்குப் பண்ணி வைத்தாற் போல் பின்னால் வந்த பல்சர் அவளது இடது புறமாக பிறேக்கிற்று. அதை ஓட்டிய கரங்கள் மலர்க்கொத்து ஒன்றை ஏந்துவது போல் அவளை ஏந்திக் கொண்டன.

இடதுகாலால் ஸ்ராண்டைத் தட்டித் திவ்யாவைத் தாங்கியவாறு நிமிர்ந் தவன் அகல, லேடி போட் பக்கவாட்டில் பல்சரை அணைத்துச் சரிந்தது.

இதற்குள் சனம் கூட்டம் போட்டிருந்தது.

தம்பி இந்தா.. இஞ்சை கொண்டு வா ராசா...

ஒரு அறுபது குரல் கொடுக்க அந்த வீட்டு முற்றத்து நிழலில் கிடந்த ஈஸிச் சேரில் திவ்யாவைக் கிடத்தியவன்... கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா.....எனும் முன்பு செம்புடன் தண்ணீர் நீட்டிற்று ஒரு கை. வாங்கித் தெளித்தான். கன்னங்களில் மெல்லத் தட்டி திவ்யா, திவ்யா என்றான். கூடியிருந்த சனத்தை தயவு செய்து கொஞ்சம் ஒதுங்கி காற்றுவர விடுங்கள். என்ன யாரோ விசிறி ஒன்றை நீட்டினார்கள். வாங்கி விசிறினான்.

சென் ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் இல் பெற்ற பயிற்சி நாடிபார் என்றது. பார்த்தான். மற்றவர்களைப் பார்த்து

பயப்பிட ஒன்றும் இல்லை. கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். என்றவன் மீண்டும்

திவ்யா... திவ்யா...என்று மெல்ல உசுப்பினான். அவள் அசைந்தாள்.

ம் ... மெல்ல முனகியவள்,

கண்களை அகலத்திறந்து ஏதும் புரியாமல் விழித்தாள். சில நொடிகளில் நடந்தது நினைவு வர விம்மத் தொடங்கி னாள்.

தொடர்ச்சி 60 ஆம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினி உலா

# பாவனையாளர்களே ஜாக்கிரதை

இன்றைய உலகமானது முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. அந்தவகையில் நாமும் அதற்கு விதி விலக்கல்ல. இன்றைய எமது சமுதாயமும் கணினியை எமது அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாக ஏற்றுக்கொண்டு விட்டது.

ஆரம்பத்தில தகவல் தொழில் நுட்பதுறையில் உள்ளவர்கள் மட்டுமே கணினியினை பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்றைய நிலையில் சாதாரண சிறிய நிறுவனங்களில் இருந்து பத்திரிகைகள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் என அனைத்து இடங்களிலும் கணினிப்பாவனை சாதாரணமாகிவிட்டது.

இதனால் ஒரு நிறுவனத்திலோ அல்லது அலுவலகத்திலோ கணினியுடன் இணைந்து செயற்படும் ஒருவர் குறைந்தது எட்டு மணித்தியாலங்கள் கணினியின் முன்னால்



தொடர்ச்சியாக இருக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் நேர சேமிப்பு, வேலைச்சுமை குறைவு போன்ற நன்மைகள் கிடைக்கின்றன. அதேவேளை இவ்வாறு கணினியின் முன் இருந்து பணிபுரிவோரிற்கு கழுத்து எலும்புகள் தேய்வதுடன் கை, கால், மூட்டு வலி மற்றும் முதுகெலும்பு, நரம்பு மண்டலம் என்பன பாதிப்படைதல் போன்ற கடுமையான பிரச்சினைகள் தோன்றவும் வாய்ப்புக்கள் அதிகம் என வைத்தியர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

குறிப்பாக தொடர்ச்சியாக 5 மணித்தியாலங்கள் அசையாமல் அமர்ந்து கணினியில் பணியாற்றுபவர்கள் பிற்காலத்தில் பக்கவாதத்துக்கும், நரம்புமண்டல பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள், என அதிர்ச்சியான தகவலை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

நீங்கள் கணினி முன்பாக அமர்ந்து குறைந்தது 5 மணித்தியாலங்களுக்கு மேல் வேலைசெய்கிறீர்கள் என்றால் மேற்குறிப்பிட் வருத்தங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு நீங்கள் ஆளாகிறீர்கள் எனில் பின்வரும் அறிகுறிகள் உங்களில் தெரியலாம்.

- இரண்டு மணித்தியாலங்கள் வேலைசெய்த பிறகு கால் மூட்டுப் பகுதி மரத்துப்போவது போலவும் லேசன வலியும் தோன்றுதல்.
- நேரம் செல்ல செல்ல இரு விலாப்புறமும் வலிக்கத் தொடங்குதல்
- 'டென்னில் எல்போ' எனப்படும் கைமுட்டில் வலி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கட்டிற்குமேல் மரத்துப்போவது போன்ற உணர்வு.

■ தோற்பட்டை, பின்கழுத்து மற்றும் தலையின் பின்புறம் ஆகியவற்றில் விட்டு விட்டு வலி

■ இவ்வாறான பிரச்சினைகள் உங்களில் தெரிந்தால் நீங்கள் உடனடியாக சிகிச்சை எடுக்க வேண்டும்.

ஆனால் கணினியின் முன்னால் தொடர்ச்சியாக அமர்ந்து வேலைசெய்யும் எல்லோரும் இவ்வாறு பிரச்சினைக்கு ஆளாவது இல்லை. ஏடாகூடமான முறையில் அமர்ந்துகொண்டு தொடர்ந்து வேலைசெய்தாலேயே இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இவற்றை தவிர்க்க கணினி முன்னால்வேலை செய்ய அமரும் போது கைகால்களை முறையா குறிப்பிட்ட கோணத்தில் வைத்துக் கொண்டு அமரவேண்டும்.

■ முதலில் கணினி முன் அமர வேண்டிய இருக்கையை சரியானதாக தேர்வு செய்ய வேண்டும். நம் வீடுகளில் பயன்படுத்தும் 'பிளாஸ்டிக்' இருக்கைகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் அதன் பின்புறத்தில் உள்ள வலைவான பாகத்தில் முதுகுப்பகுதி சரியாக சேராமல் வளைந்து அமரும். இதன் மூலம் முதுகெலும்புக் கோளாறு ஏற்படும்.

■ தற்போது அனைத்து நிறவனங்களிலும் சொகுசு இருக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவற்றிலும் நாம் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

■ கணினி மேசையை விட நம் இருக்கை தாழ்வாக இல்லாமலும் பார்த்துச் கொள்ள வேண்டும். மேலும் மேசையை விட அதிக உயரமாக இல்லாமலும் பார்த்துக் கொள்ளவும். ஏனெனில் அதிக உயரம் மற்றும் அதிக தாழ்வு நம் முதுகெலும்பை பதம் பார்த்துவிடும்.

■ இருக்கைகளில் சாய்வுத்தன்மை (Aushbock) அதிகமாக இருக்காதவாறு மாற்றங்கள் செய்யவும். சாய்வுப் பகுதியும், இருக்கையும் 'L' வடிவில் இருக்கும் படி மாற்றவும். கணினி முன் அமரும்போது நம் இடுப்புப்பகுதியை அதாவது முதுகெலும்புத் தொடர் தொடங்கும் இடம், இருக்கையில் சரியாக பொருத்தும் படி அமர வேண்டும். முதுகை முன்னோக்கி அல்லது பின்னோக்கி வளைக்கக்கூடாது.



■ மொனிட்டர் நம் பார்வையிலிருந்து குறைந்தது 18 அங்குல தொலைவில் இருத்தல் வேண்டும்.

■ கீபோர்டில் ரைப் செய்யும் போது நம் மணிக்கட்டை மேல் நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ வளைக்காமல் கீபோர்டில் நேராக வைத்து டைப் செய்யவும். அதேபோல் முழங்கையை தோள்பட்டை யிலிருந்து அதிகம் வளைக்காமலும் நீட்டாமலும் 'L' வடிவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 59 ஆம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்பன் பதில்கள்..

அந்நியனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*ஜெனனி, யாழ்ப்பாணம்.*

தமிழ் திரையுலகுக்கு அந்நியன் அந்நியனல்ல- ஆனால் இன்றைய உலகுக்கு மிக அவசியமானவன்.

தெருக்களில் பெண்களுக்கு தொல்லை தரும் ஆண்களைப் பற்றி?

*கமலவேணி -கரவெட்டி*

செருப்படி கொடுக்க வேண்டும்.

(ஆண்களுக்குத் தொல்லை தரும் பெண்களை?...........)

விபத்துக்கள் நடந்த இடங்களில் விசாரணை நடக்க சுணங்குதாமே?

*ஷ்யாம், பொற்பதிவீதி*

உ.ஷ்....நமக்கேன் வம்பு, உது பெரிய இடத்து விவகாரம் கண்டியளோ.

இப்போதெல்லாம் கடைகளில் சில்லறை தாராளமாய்க் கிடைக்குதாம் உண்மையா?

*வேணு -வேலணை*

இருக்கலாம் சொன்னவன் சுடுவானெல்லோ!...

''எழுந்து நடக்காத குழந்தை, எடுக்குதாம் தண்டு''- உங்களுக்கு ''நெத்தியடி'' இப்ப தேவைதானா?

*ஜித்தன் - தமிழீழம்*

'சுனாமி' வந்தது - வந்த கையோடதானே எல்லாத்தையும் சுருட்டிக் கொண்டு போனதெண்டுகினம்.

ஊர்க் கலவரங்களிலை வீடுகள் எல்லாம் விளக்காகிற விந்தை நடந்ததாம் இதைப்பற்றி?

*ஆடியபாதன் - கல்வியங்காடு*

வம்பனுக்கேனப்பா வம்பு - உதைச் சுடுவானுக்கு விடுவம்.



நல்லூர்த் திருவிழாவில் பல இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ரேஸ் நடத்துகிறார்களே எதற்காக?

*குமரன்,கல்லூரி வீதி,யாழ்*

இரவல் வாங்கினதை எத்தனை நாளைக்கு மினுக்கேலும்? அது தான் ஒரே நேரத்தில் ஊருக்கே படம் காட்ட நல்ல வழியாச்சே.

சுடுவானுக்கு பஸ் நடத்துனர்கள், வர்த்தகர்கள் எச்சரித்தார்களாமே உண்மையா?

*சூர்யா, இருபாலை*

இது என்னையா வம்பு, சூரியனுக்கே ரோச்சா?

சுவையான சுவாரஸ்யமான பதில்களுக்கு வம்பன் பதில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்க வைக்கும் விஜயகாந்த்

## ஈழத் தமிழருக்காய் ஒரு சபதம்



உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் பிரபாகரனுக்கு ஆதரவு தெரிவிப்பான். அந்த வகையில் பிரபாகரன் வெற்றிபெறும் நாள் வரையில் நான் எனது பிறந்தநாளைக் கொண்டாட மாட்டேன் என்று கூறியிருக்கின்றார் தமிழக நடிகர் விஜயகாந்த்.

தமிழ் திரைப்பட நடிகரான விஜயகாந்த் இலங்கை ரசிகர்களிடமும் அமோக வரவேற்பைப் பெற்றவர். அண்மையில் அவர் தனி அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்தார். அதனது முதலாவது அரசியல் மாநாடு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி நடக்கவுள்ளது. இந்த மாநாட்டில் 2லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என்று விஜயகாந்த் எதிர்பார்க்கிறார்.

நடிகர் விஜயகாந்த், விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தீவிர விசுவாசி என அடையாளம் காணப்படும் ஒருவர். ஈழத்தமிழர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு சமயங்களில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவரது கட்சியின் பிராந்திய மகளிர் அணியை நேற்று முன்தினம் சேலத்தில் ஆரம்பித்து வைத்தார் விஜயகாந்த். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

எம்.ஜி.ஆருடன் என்னை ஒப்பிட்டு அழைக்கவேண்டாம் என ரசிகர்களுக்கு அன்று கட்டளையிட்டும் அவர்கள் கேட்கவில்லை. அதற்கு நான் என்ன செய்ய முடியும்? என் ரசிகர்கள் எழுதும் சுவர் விளம்பரங்களை மாற்றுக் கட்சியினர் அழிக்கின்றனர். சுவர் விளம்பரங்களையே ஏற்காத மாற்றுக் கட்சிகள் எப்படி மக்களைக் காப்பாற்றப் போகின்றன. அதுவும் அவை வளர்ந்து விட்ட கட்சிகள். நாங்கள் இப்போது தான் அடியெடுத்து வைத்துள்ளோம். ஆனால், நாங்கள் வளர்ந்து விட்டோம் என்ற அச்சத்தில் இப்படி நடந்து கொள்கின்றனவா அவை?

இதுவரை என் ரசிகர்கள் பல கட்சியில் இருந்தார்கள். இப்போது நான் கட்சி துவங்குவதால் எந்த ரசிகர்கள் வந்தாலும் ஏற்றுக் கொள்வேன். தமிழக அரசியலில் என் கட்சி மாற்றுக் கட்சியாக அமையாது. ஆனால் மாற்றத்தை ஏற்படுத்தும் சினிமாவைப் போல அரசியலிலும் தன்னம்பிக்கையோடு போராடுவேன். என்.டி.ஆர்., எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போல அரசியலில் வெற்றி பெறுவேன். ஆனால் நான் யாரையும் சார்ந்து இருக்கவில்லை.

தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றிப் பேச வேண்டாம். இருந்தாலும், உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் பிரபாகரனுக்கு ஆதரவு தெரிவிப்பான். அந்த வகையில் பிரபாகரன் வெற்றிபெறும் வரை நான் பிறந்த நாள் கொண்டாட மாட்டேன் என்று எனக்குள் சபதம் ஏற்றுள்ளேன்.

- இவ்வாறு நடிகர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சகர்

## வளவை வளவன்

அந்தப் பட்டினத்தில் எந்தத்துறை நூல் வெளியீடென்றாலும் அவர்தான் விமர்சன உரையாற்றுவார். வார்த்தைகள் சரம் சரமாய் அவருக்கச் சேவகம் செய்யும். "அத்தனை கச்சிதமாக அவர் செய்வார்" என்று அவரது விசிறிகள் சொல்லிப் பெருமையடித்துக் கொள்வர்.

வழமைபோல அன்றும் ஒரு வெளியீட்டு விழாவிற்கு விமர்சனத்திற்காக அந்த விமர்சகர்தான் வந்திருந்தார் பெருமிதத்தோடு.

தலைவர் முன்னுரையோடு ஆரம்பமான அந்த விழா நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சமகால நிகழ்வுகள், கடந்தகால நிகழ்வுகள், சரித்திரங்கள் என்ற ஒவ்வொருவரும் தலைப்புக்கேற்றவாறு தமது கருத்துக்களை வழங்கிக் கொண்டனர்.

ஒவ்வொருவரது கருத்துரை முடிவிலும் மண்டபத்தை அதிரவைத்து வானை உதைத்தது கரகோஷம்.

விமர்சன உரை ஆரம்பமானது. எழுத்தாளர்களது மனதில் ஏதோ ஒரு இனம் புதியாத பயம் கொலுவிருந்தது. இது வரை உரையாற்றியவர்கள் விடயதானங்களையும் தொட்டு அதற்குரிய விமர்சன வடிவையும் உரையாக்கிச் சென்றுவிட்டதால், விமர்சகர் கத்தி வைப்பது போல் ஏதோ தனது அளவுகோலால் நீட்டிக் குறுக்கிப் பிச்சுப்பிடுங்கி விடுவாரோ என்ற அச்சம் ஆட் கொண்டு விட்டது.

விமர்சகர் ஒலிவாங்கி முன் வந்து வணக்கம் சொல்லி, "முட்டையில் மயிர் பிடுங்குவதல்ல விமர்சனம், மறைபொருளையும் புலப்படு பொருளையும் சேர்த்துத் திரட்டிய தெளிவின் ஜோதிதான் விமர்சனம்" என்ற பீடிகையோடு ஆரம்பித்தார்.

கவிதைகள், கட்டுரைகள், பாராட்டுக்கள், வரலாறு, பகுப்பு, அருமை, உச்சம், குருவை மிஞ்சிய சாயல்.....இப்படியே சில நிமிடங்களில் அடுக்கத் தொடங்கினார்.

கரகோஷம் அடங்கப் பல நிமிடங்கள் பிடித்தன.

தலைகால் புரியாமல் வீதியோரத்துக் குருவிச் சாத்திரக்காரரின் பாணியில் எதையெதையோ எல்லாம் வாய்பாட்டு முறையில் விளாசித்தள்ளினார்.

எழுத்தாளர்கள் தப்பிவிட்ட நினைப்பில் கலகலத்தபோதுதான் அது நடந்தது.

"நாற்பத்தைந்தாம் பக்கத்துப் புள்ளிவிபரங்கள் உபதலைப்புக்களாகப் போடப்பட்டுள் என. வெறும் தவறல்ல மாபெரும் தவறு . இந்தத் தவறு கட்டுரையாளரின் தவறாக இருக்காது. அச்சுக் கோப்பாளர் தவறாகத்தான் இருக்க வேண்டும்" என்று நிறுத்தினார்.

ஆக்கங்களின் குறைபாடுகளை இப்படியே அச்சுக் கோப்பவர் தலைமீது தள்ளிவிட்டுத் தப்பித்துக்கொள்வது அவரது விமர்சனக் கைத்தேர்வு. ஆக்கத்திற்குரியவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றும் தந்திரமோ?

அச்சக்கோப்பவர் தவறு என்றதும் ஒருவர் எழுந்து நின்றபடி, அந்த ஆக்கத்தின் மூலப் பிரதியையும் ஒப்புநோக்கற் பிரதியையும் உயர்த்தியவாறு சொன்னார், "மூலம் அப்படித்தான்" என்று. அச்சகத்தார் இப்படித் தயாராக இருந்திருப்பார் என்பதைப் பாவம் விமர்சகர் அறியவில்லை. இனி மேல் இந்தக் கிளிச்சாத்திர விமர்சனத்தை எங்கும் அரங்கேற்ற முடியாதென்பதைப் புரிந்துகொண்ட பாவனையில், நூலை அறுத்த பட்டம் போல, விமர்சகர் வணக்கம் சொல்லி விடைபெற்றார்.

மண்டபம் நிறைந்த கேலிக் குரல்களும் சிரிப்பொலிகளும் அடங்க வெகுநேரம் பிடித்தது.

வெளியே செல்லும் வாய்ப்பை நோக்கியவாறு தலைகவிழ்ந்திருந்தார் விமர்சகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 இல் ஐந்து

தேசிகன்

### பாதகங்கள் ஐந்து

கொலை
பொய்
களவு
கள்ளருந்துதல்
குருநிந்தை

### பாவகை ஐந்து

வெண்பா
ஆசிரியப்பா
கலிப்பா
வஞ்சிப்பா
மருட்பா

### குரவர் ஐவர்

அரசன்
குரு
தந்தை
தேசிகன்
மூத்தோன்

### பூதங்கள் ஐந்து

நிலம்
நீர்
தீ
காற்று
வானம்

### இலக்கணம் ஐந்து

எழுத்து
சொல்
பொருள்
யாப்பு
அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்தகாலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவை, 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT & T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி விற்பனை, பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பை ஏற்படுத்துதல், மென்பொருள் உற்பத்தி ஆகியவற்றை இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

சகல கணனி உதிரிகளும்
கொழும்பை ஒத்த விலையில்

3 வருட முழு உத்தரவாதம்

Spot
Mobile Service
Call: 021-4590720
0773134737

Latest கணனிகள் (3 வருட முழு உத்தரவாதம்) மற்றும் உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இது எங்கள்
மொபைல் சர்வீஸ்
நீருடன்
இணைக்கப்பட்டது.

UNIT

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737 / 0776093477




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுவோல் தரும் நெத்தியடி

## நாங்கள் சரியாக இருக்கிறம், நீங்கள் சரியாக இருக்கிறியளோ?

புதுசா ஒரு வாகனம் வாங்கினால் 30,000 கிலோமீற்றர் அல்லது 2 வருசம் உத்தரவாதம். ஆனால் அதெல்லாம் ரோட்டில ஓடுற வாகனங்களுக்குத் தானாம். இங்க யாழ்ப்பாணம் மாதிரி மலைகளில் ஓடுற வாகனங்களுக்கு இல்லையாம்.! வழமையாக மலையில ரோட்டுப் போட்டுப் பாத்திருப்பியள், ஆனால் இஞ்ச ரோட்டில எல்லே மலை போட்டுக் கிடக்குது.

என்ன எல்லோரும் வாயப்பிளக்கிறியள். யாழ்ப்பாணத்தல் எங்க மலையெண்டுதானே? அது நான் சொல்லுறது வீதியில பெரிசா "வீதி மேடு" எண்டு சொல்லி (Humb) போட்டிருப்பினம், அதைபற்றிதான்.

வீட்டுக்கு வீடு வாசல்படி இருக்குதோ இல்லையோ, வீதிக்கு வீதி, வீதி மேடு(Humb) போட்டு வைக்கினம் எங்கட ஆக்கள்.

உந்த விசயத்தில மட்டும் ஆமிக் காரனுக்கும் எங்கட சனத்துக்கும், இடையில் சரியான போட்டி. அவன் 5 காம் போட்டால் நாங்கள் ஆகக்குறைந்தது 10 எண்டாலும் போடுவம்.

ஆமிக்காரனின்ற 'கம்ப்' (Humb) அவனின்ர முகாமுக்கு முன்னாலதான் எண்டாலும் அதை ஆளுயரத்துக்கல்லே வச்சிருக்கிறான். ஆரும் அதால வாகனம் ஓடிப்போகேலுமோ! உருட்டிக்கொண்டுதான் போகவேணும். இல்லாட்டி பிரளவேண்டியது தான். அந்தளவுக்கு மோசம். நடுவில கம்பிபோட்டு அதுக்குமேல தார் ஊத்தி வச்சிருப்பான். ரோட்டில மற்ற இடமெல்லாம் பள்ளமாக போயிடும். ஆனால் இது மட்டும் வரவர வளிற மாதிரி கிடக்குது.

மழைவிட்டும் தூவானம் நிக்காத மாதிரி ஆமிக்காரன் முகாமை மூடிட்டுப் போனாலும் அது மட்டும் மறையாது நிற்கும். அந்தளவுக்கு உறுதியான 'கம்ப்' போட்டிருப்பாங்கள்.

அடுத்தது எங்கட ஆக்களின்ர விசயம், அதைபற்றி நினைச்சாலே ஒரு பழமொழிதான் நினைவிற்கு வரும். "முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முழைச்ச காளான்" எண்டு வினம் அதுமாதிரித்தான் இதுவும். சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று தோன்றக் கூடியது தான் எங்கட ஆக்களின்ர 'கம்ப்'

ஆமிக்காரன்ர மாதிரி அவ்வளவு உறுதியாயும் ஆயுள் கூடியதாயும் இல்லாவிட்டாலும் அதிக ஆபத்தை தரக்கூடியது இதுகள் தான். அதுகும் இப்ப திருவிழா காலமெல்லே, காளான்களுக்கு மழைகாலம் எப்படியோ அதுமாதிரி இங்க 'கம்ப்' களுக்கு திருவிழாக் காலம் எண்டால் ஒரே கொண்டாட்டம். ஒவ்வொருவரும் தங்கடவீட்டுக்கு முன்னுக்கு தண்ணீர் குடம் வைக்கிறார்கள்ளோ இல்லையோ இந்த 'கம்ப்' வைத்துவிடுவார்கள்.

வாகனத்தை எடுத்துக்கொண்டு ரோட்டில இறங்கினா வேதனை தான் மிஞ்சும். தங்கடைவாகனத்தை குழந்தையள் மாதிரி பாவிக்கிற எத்தின சனங்களுக்கு உந்த 'கம்ப்' பில ஏறி இறங்க மனம் என்னபாடு படும் தெரியுமே.

சரி அதவிடுங்கோ, கண்ட இடங்களிலும் 'கம்ப்' போட்டுவினம், கேட்டால் வீதிவிபத்துக்களை குறைக்கலாம், ஆனால் நடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகீழாத்தான். உந்த 'கம்ப்' புகள்ள ஏறி இறங்கின வாகனங்கள் (சைக்கிள் உட்பட) ஒண்டோட ஒண்டு முட்டு ப்படுறதும், பக்கத்தில பக்கத்தில கொளுவுப் படுறதும், பார்க்கிறதுக்கு வயித்தெரிச்சலா இருக்கும்.

உதைவிட மோசம் என்னவெண்டால் இரவில அவசரமாக வாகனத்தை எடுத்துக் கொண்டு போகேக்க இரவோடு இரவாக முளைக்கிற இந்த 'கம்ப்'புகள்ள மாட்டுப்பட்டு பிரளவேண்டியதுதான்.

உதுகளை கேட்கப்போனால் பெரிய பிரச சனைதான்வரும். உதுக்கெண்டு பொறுப்பா ஒருத்தரும் இல்லையோ? ஏன் கேக்கிறன் எண்டா, உந்தக் கூத்து எனக்கு நினைவு தெரிஞ்ச நாளில இருந்து நடக்குது. ஒரு வேளை உதுதான் நடைமுறையோ?

**நெத்தியடி**

மேலே சொல்லப்பட்ட விடையங்கள் சமூகப்பொறுப்புள்ள எவருடைய சிந்தையிலும் படக்கூடிய ஒன்றுதான். இருந்த போதிலும் இதற்கான தீர்வு என்ன?

முதலாவது இராணுவத்தினரால் அமைக் கப்பட்டுள்ள வீதி மேடுகள் (Humb). எமது நாட்டில் இராணுவம் என்பது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட, தான் தோன்றித்தனமாக செயற்படக்கூடிய அதிகார பலம் மற்றும் ஆயுதபலம் பொருந்திய ஒரு அமைப்பு. எமது இந்த 'நெத்தியடி' பகுதி யில் அதுபற்றி மேலும் விளக்கங்கள் கொடுப்பது அதற்கான தீர்வு என்பது பற்றி ஆராய்வது வீண் வேலை என்பது கசப்பான உண்மை. எனவே அதை தவிர்ப்போம்.

அடுத்தது எமது மக்களால் அமைக்கப் படும், வீதி மேடுகள். இவை பற்றி காரசார மான விவாதங்கள் பல இருக்கின்ற போதும் யதார்த்த்திற்கு ஏற்ற சில நடைமுறைகளை பற்றி நாம் இங்கு பார்ப்போம்.

இவ்வாறா வீதி மேடுகள் தேவைதானா? இது மிகப்பெரியதொரு கேள்வி, அதற்கான விடை எவ்வாறிருக்கும் என்றால், சில இடங் களில் தேவை சில இடங்களில் தேவையி ல்லை. சரி அவ்வாறானால் அந்த தேவை பற்றி தீர்மானிக்கக்கூடியவர்கள் யார்? அந் தந்த கிராமசேவகர்கள், பிரதேச செயலகத்தி னர், நகரசபையினர் மற்றும் மாநகர சபையி னர் மட்டுமே தவிர, தனி ஒரு மனிதனின் முடிவில் இவ்வாறான வீதி மேடுகளையோ அல்லது வீதித் தடைகளையோ அமைக்க முடியாது.

அவ்வாறு அனுமதி பெற்று அமைக்கப் படும் வீதிமேடுகள் கூட குறிப்பிட்டகாலத்திற் குள் அகற்றப்படவேண்டும். இது ஒரு முக்கியமான அம்சம். இதைவிட முக்கிய மான விடயம் என்னவென்றால் அனுமதி பெற்று ஓரிடத்தில் வீதிமேடு அமைக்கப்படுமா னால், அது சரியான முறையில் அந்த வீதியை பாவிப்போருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட தூரத்துக்கு முன்னரே இது தொடர்பான எச்சரிக்கை குறியீடு போடப்பட வேண்டும்.

இதுதான் இந்த வீதிமேடு தொடர்பான நடைமுறை. இந்த ஒழுங்கை பின்பற்றப் படாமைக்கான காரணங்கள் என்ன?

மேலே குறிப்பிட்ட நிர்வாக அலகுகளில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளின் அசிரத்தையே, இதற்கு காரணம்.

முந்தியெண்டால் பரவாயில்ல. நாங்க ளும் நியாயம் கேட்க முடியாது. ஏனெண் டால் வீதிவரி எதுவும் கட்டுவதில்லை. ஆனால் இன்று அவ்வாறில்லை. வீதிவரிகட் டாத வாகனம் எதுவும் இன்று வீதியில் பயணிக்க முடியாது. பொலிஸாரின் கெடுபிடி அப்படி. இந்தளவிற்கு எம்மிடம் வரிவிடயத்தில் இறுக்கமாக இருப்பவர்கள் அதற்கான வசதிகளை செய்துதருவதிலும் அக்கறையாக இருக்கவேண்டும்.

இனியும் இந்தநிலை தொடருமானால் இதுதொடர்பான மக்கள் போராட்டம் ஒன்றினை சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் போக்குவரத்துப்பிரிவுப் பொலிஸாரும் எதிர்கொள்ள நேரிடும்.

**நாங்கள் சரியாக இருக்கிறம்,**
**நீங்கள் சரியாக இருக்கிறியளோ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் இருக்கும் இந்த இளைஞன் சந்தர்பால் என்னும் இடததிற்குத் தன் நண்பர்களுடன் போயிருந்தான். அந்த இடத்தில் தன்னை ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற ஆசையினால் உந்தப்பட்டவன் அது ஒரு விபரீதத்துக்கு வித்திடப் போகின்றது என்பதைப் பற்றி எதுவும் அறியாதவனாகத் தன் நண்பர்களில் ஒருவனிடம் தன்னை அந்த இடத்தில் வைத்துத் தனிப்படம் ஒன்று எடுக்குமாறு கேட்டான். அந்த நண்பனும் அதற்குச் சம்மதித்து புகைப்படம் எடுக்க முற்பட்டான். எடுத்தவன் புகைப்படம் எடுத்த நேரம் முதற்கொண்டு வழமைக்கு மாறாகக் காணப்பட்டான். எதையோ கண்டு பயந்தவனாகத் தென்பட்டான். மற்றவர்கள் இது பற்றிக் கேட்டதற்கும் சரியான பதிலெதுவும் கூறவில்லை. இப்படியே இரண்டு நாட்களின் பின்னர் மருத்துவக் கல்லூரிக்குச் சென்றவன் அங்கே மரணமடைந்தான். அவன் இறப்பிற்குக் காரணம் மாரடைப்பே என மருத்துவர்கள் தெரிவித்தனர்.




ஆனால் அவன் எடுத்த புகைப்படத்தைப் பிரதியாக்கம் செய்த நண்பனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்தப் புகைப்படத்தில் தன்னைத் தனித்தே எடுக்குமாறு கேட்டவன் தன் பின்னால் வலது பக்கதில் இருந்த பெண்ணுருவைப் பார்த்து பயந்தே போனான். இதனை மற்றவர்களுக்கு காண்பித்த போது மற்றவர்கள் அதனை ஏளனம் செய்தனர். சிலர் டுபாக்கூர் வேலை. தொழினுட்ப வளர்ச்சியாற் செய்த டம்மி விளையாட்டு என்றனர்.

ஆனால் இப்படியான சம்பவங்கள் உலகில் பல நிகழ்ந்திருப்பது நாமறிந்ததே. எது எப்படியோ இந்தப் படத்தைப் பார்க்கும் போது நரம்புத் தண்டு ஒரு முறை ஜில்லிடுகின்றது என்பது மறுக்க முடியாதது. எனவே யாம் பெற்ற இன்பம் பெறுக என்ற நல்லெண்ணத்தால் இதனை உங்கள் பார்வைக்கு விடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பின் வேடத்தில் சிலந்தி

கு.சாரங்கி

**இதோ,** சின்னஞ்சிறிய ஒரு வகை சிலந்திப்பூச்சி எறும்புப்புற்றுக்குள் நைசாக நுழைகிறது. நுழைவது மட்டுமா, அந்த எதிரிகளின் வீட்டிலேயே குடியேறி விடுகிறது. அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி தன்னுடைய தோற்றத்தையும் நடத்தையையும் மாற்றிக் கொண்டு மாறுவேடத்தில் வாழ்கிறது இந்த சிலந்தி. இப்படி பாவனை செய்வது மிக அவசியம், ஏனென்றால் தொல்லை என்று ஏதாவது வந்துவிட்டால் போதும் அந்த எறும்புகளுக்கு வெறி தலைக்கேறிவிடும். அதோடு, சிலந்திக்கு எறும்பைப்போல உடம்பு இல்லாததால், அதற்கு அதுவும் ஒரு பெரிய சவாலாக இருக்கிறது.

எறும்புக்கு ஆறு கால்களும் இரண்டு உணர்கொம்புகளும் இருக்கின்றன. சிலந்திக்கோ எட்டு கால்கள் இருக்கின்றன, ஆனால் உணர்கொம்புகள் இல்லை. அப்படியென்றால் இந்த சிலந்தி எப்படி தன்னை ஒரு எறும்பாகக் காட்டிக்கொள்ள முடிகிறது? அது எறும்புப் புற்றக்குள் தன் ஆறு கால்களுடன் மட்டும் ஓடியாடுகிறது. மற்ற இரண்டு கால்களையோ முன்னே நீட்டிக் கொண்டு, உணர்கொப்புகளைப் போல் காட்டி பாசாங்கு செய்கிறது.

அதோடு, சந்தேகமே வராத விதத்தில் தன் போலி உணர்கொம்புகளை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைக்கவும் செய்கிறது இந்த வேடதாரி. அதை ஆட்டிக்கொள்கிற விதத்தைப் பார்த்தால், எறும்புகளின் உணர்கொம்புகளே தோற்றுப்போகும்! அது மட்டுமா, எறும்புகளைப் போலவே கோணல் மாணலாக தள்ளாடி நடக்கிறது இந்த நடிப்புத் திலகம்!

சாட்சாத் எறும்பைப் போலவே இருக்க இந்த சிலந்தி முயலுகிறது. ஏனென்றால் எறும்போடு எறும்பாக புற்றில் குடியிருப்பதாக காட்டிக்கொண்டால்தான் இந்த சிலந்தியால் பிழைக்க முடியும். எறும்புப் புற்றிலே இருக்கும்போது, சிலந்திக்குளவிகள் (spider wasps) போன்ற இயற்கை எதிரிகளிடத்திலிருந்து இந்த சிலந்திக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது. மேலும், சிலந்திப் பூச்சிகளை பொதுவாக ரசித்து ருசிக்கும் பாடும்பறவைகளும் கூட அவற்றை சாப்பிடாமல் விட்டுவிடுகின்றன. சிலந்திகளை வேட்டையாடும் மற்ற சிலந்திகளும் இந்த நடிகனின் "உணர்கொம்புகளைப்" பார்த்து ஏமாந்து விடுகின்றன.

ஒரு வேளை ஒரு பறவையோ பல்லியோ அல்லது வேறு ஏதாவது ஜீவியோ அந்த எறும்புக் கூட்டத்தைத் தாக்கினால், உடனே அந்த சிலந்தி தன் வேஷத்தைக் கலைத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிவிடுகிறது. எறும்புகளைவிட சிலந்திகளுக்கு நல்ல கண்பார்வை உள்ளது. அவற்றால் குதித்துச் செல்லவும் முடியும். இதனால் தப்பிப்பது சுலபமாகி விடுகிறது.

பகல் நேரத்தில் அந்த சிலந்தி எறும்புப் புற்றுக்குள் மாட்டிக்கொள்ளாதபடி மிக உஷாராக நடந்துகொள்கிறது. இரவிலோ அது சுறுசுறுப்பாகி, அந்த எறும்புப்புற்றில் இருக்கும் எறும்புகளையே பிடித்து தின்றுவிடுகிறது! ஒரு வேளை அதன் வண்டவாளம் தெரியவந்துவிட்டால், தன் எட்டு கால்களையும் பயன்படுத்திக் கொண்டு ஓடோடிவிடுகிறது.

சிலசமயம் இந்த எறும்புப்புற்றுக்குள் ஆண் சிலந்தியோடு பெண் சிலந்தியும் சேர்ந்துகொள்ளும். அந்தப் பெண் சிலந்தி, தன் துணைக்கு விசுவாசமாக இருப்பதோடு, புத்திசாலித்தனமாகவும் நடந்துகொள்கிறது. தன் துணையை மட்டுமல்லாமல் தன் முட்டைகளையும் பாதுகாப்பதற்கு, அந்த எறும்புப் புற்றுக்குள் பாதுகாப்பு வலையைப் பின்னுகிறது.

இந்தச் சிலந்தியைப் பற்றி கற்றுக் கொள்வதற்கு இன்னுமதிகம் இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் பூமியில் இருக்கும் மற்ற அநேக விலங்கினங்களின் விஷயத்திலும் இதுவே உண்மை. ஆவலைக்கிளறும் கடவுளுடைய படைப்புக்களைப் பற்றி எதிர்காலத்தில் இன்னுமதிகமாகக் கற்றுக் கொள்ளும்போது எவ்வளவு அருமையாக இருக்கும்.!

## ஓவியர்....



## தயார்..

எமது மண்ணில் இலைமறை காயாக இருக்கும் ஓவியர்களை உலகிற்கு இனங்காட்டும் ஒரு செயற்பாடு இதுவாகும்.

உங்களிடம் ஓவியத்திறமை இருக்கும் என நீங்கள் கருதினால் வரைந்து அனுப்புங்கள்.

தரமானவை வேடிக்கையில் பிரசுரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்

பெண்ணைப் பூமியென்றார்கள் - அவள்
தன்மேல் எதையும் தாங்கி,
மண்ணுள் மனிதனைப் புதைப்பது போல் - இவள்
தன்னால் மனிதர்கள் புதைவதனால்.

- காளமேகன்

## மனிதன் உயர்கையில்

பார்வை கீழ் படியும் போது
நிழல்களே தரிசனமாகும்.
பார்வை உயரும் போதே
நிஜங்கள் தரிசனமாகும்
மனிதன் தாழும் போது
நிழல்களே சாட்சியாகும்
மனிதன் உயரும் போதே
நிஜமாய் அவனேயாவான்.

-குகன்

# கவிச்

## கற்றல்

-ஷ்யாம்

உனக்கு கற்பிக்க வந்தேன.
கணிதம் என்னிடம் நீ கற்றாய்....
இனிக்கும் SMS பல விட்டு,
கணிதத்துடன் என் காதலையும்
வெளிநாட்டு மாப்பிள்ளை வந்த
இனி பாடம் வேண்டாம் என்றாய்
உன்னிடம் கற்றுக் கொண்டேன்-
உலகத்தின் பால பாடம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா(ரெ)வென்று.........

பூ மலரும் பொழுதுகளில்
உன் விடியலின் பூபாளமாய்...
நீ செல்லும் இடமெல்லாம்
உன் நிழலானேன் நான்.
நீ என்னைக் காணாத போதும்
உன் விழிவீச்சுக் கேங்கி நின்றேன்.
நீ எனைக் கண்டபோதோ...
உன் இதழ் பிரித்தாய் **அண்ணா** வென்று!

# காதல்

## காத்திருப்பு

- இளங்கோ

காத்திருக்கும் நேரமெல்லாம் வீணென்று
காதலுக்கு இடம் கொடுத்தில்லை!
காத்திருந்த நீ வந்து உள்ளத்தே வீற்றிருந்து
காதலின் தடம் பதித்து விட்டாய்!
காத்திருக்கிறேன் உன் கல்யாணப் பரிசை
காதலைப் புதைத்த செய்தியுடன் தருவதற்கு
காத்திருக்கிறேன் தேனிலவுக்கா ஹற்றன் போய்
கணவனுடன் நீ வருவாய் என்பதற்கு!

ாம
ய்.....
யும் பெற்றாய்.
ந்தவுடன்....
றாய்-
_ன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பார்த்திபன் கனவு...

## 2. ராஜ குடும்பம்

பொன்னன் போன பிறகு, வள்ளி வீட்டுக் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினாள். குடிசையை மெழுகிச் சுத்தம் செய்தாள். மரத்தடியில் கட்டியிருந்த எருமை மாட்டைக் கறந்து கொண்டு வந்தாள். பிறகு காவேரியில் மரக் கிளைகள் தாழ்ந்திருந்த ஓரிடத்திலே இறங்கிக் குளித்து விட்டு வந்தாள். சேலை மாற்றிக் கொண்ட பிறகு மறுபடியும் அடுப்பு மூட்டிச் சமையல் செய்யத் தொடங்கினாள்.

ஆனால், அவளுடைய மனது என்னமோ பரபரவென்று அலைந்து கொண்டிருந்தது. அடிக்கடி குடிசை வாசலுக்கு வந்து தன்னுடைய கரிய பெரிய கண்களைச் சுழற்றி நாலாபுறமும் பார்த்துவிட்டு உள்ளே போனாள். ஏதோ விசேஷ சம்பவங்கள் நடக்கப் போகின்றன என்று ஆவலுடன் எதிர்பார்த்தவளாய்த் தோன்றினாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் உறையூர்ப் பக்கத்திலிருந்து பத்துப் பதினைந்து குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அழகாக அலங்கரிக்கப்பட்ட இரண்டு வெள்ளைப் புரவிகளும் ஒரு தந்தப் பல்லக்கும் வந்தன. அந்த வெண் புரவிகளின் மேல் யாரும் வீற்றிருக்கவில்லை பல்லக்கும் வெறுமையாகவே இருந்தது. திடகாத்திர தேகிகளான எட்டுப்பேர் பல்லக்கைச் சுமந்து கொண்டு வந்தார்கள்.

எல்லாரும் தோணித்துறைக்குச் சற்று தூரத்தில் வந்து நின்றார்கள் பல்லக்குக் கீழே இறக்கப்பட்டது. குதிரை மீதிருந்தவர்களும் கீழே இறங்கிக் குதிரைகளை மரங்களில் கட்டினார்கள்.

இதையெல்லாம் குடிசை வாசலில் நின்று வள்ளி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் அப்படி நிற்பதைப் பார்த்த வீரர்களில் ஒருவன், "அண்ணே! வள்ளியிடம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு வரலாம்" என்றான்.

"அடே, வேலப்பா! காவேரி நிறையத் தண்ணீர் போகிறது. வள்ளியிடம் என்னத்திற்காகத் தண்ணீர் கேட்கப் போகிறாய்?" என்றான் மற்றவன்.

"இருந்தாலும் வள்ளியின் கையால் தண்ணீர் குடிப்பது போல ஆகுமா, அண்ணே!"

இப்படி பேசிக் கொண்டு இருவரும் குடிசையருகில் வந்து சேர்ந்தார்கள்.

"வள்ளி! கொஞ்சம் தாகத்துக்குத் தண்ணீர் தருகிறாயா?" என்று வேலப்பன் கேட்டான்.

வள்ளி உள்ளே விரைவாகச் சென்று சட்டியில் மோர் எடுத்துக் கொண்டு வந்து இரண்டு பேருக்கும் கொடுத்தாள். அவர்கள் குடிக்கும்போதே "மகாராஜா இன்றைக்கு உறையூருக்குப் போகிறாராமே? ஏன் இவ்வளவு அவசரம்? இந்த மாதமெல்லாம் அவர் 'வசந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகையில் இருப்பது வழக்கமாயிற்றே?" என்று கேட்டாள்.

"எங்களை ஏன் கேட்கிறாய், வள்ளி? உன்னுடைய புருஷனைக் கேட்கிறதுதானே? படகோட்டி பொன்னனுக்குத் தெரியாத ராஜ ரகசியம் என்ன இருக்கிறது?" என்றான் வேலப்பன்.

"காலையில் சாப்பிட உட்கார்ந்தார் அதற்குள் அவசரமாய் ஆள் வந்து, மகாராஜாவுக்குச் சேதி கொண்டு போக வேண்டுமென்று சொல்லவே, எழுந்து போய் விட்டார். சரியாகச் சாப்பிடக் கூட இல்லை!" என்றாள் வள்ளி.

"பாரப்பா, புருஷன் பேரில் உள்ள கரிசனத்தை! பெண்சாதி என்றால் இப்படியல்லவோ இருக்க வேணும்!" என்றான் வேலப்பன். வள்ளியின் கன்னங்கள் வெட்கத்தால் குழிந்தன. "சரிதான் போங்கள்! பரிகாசம் போதும்" என்றாள்.

"இல்லை வள்ளி! இந்த மாதிரி பரிகாசமெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்குச் செய்யப் போகிறோம்?" என்றான் வேலப்பன்.

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? என்ன சமாசாரம் என்றுதான் சொல்லுங்களேன்!" என்றாள் வள்ளி.

"பெரிய யுத்தம் வரப்போகிறதே. தெரியாதா உனக்கு?"

"ஆமாம் யுத்தம் யுத்தம் என்றுதான் பேச்சு நடக்கிறது. ஆனால் என்னத்துக்காக யுத்தம் என்றுதான் தெரியவில்லை."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாலைந்து வருஷமாய் நமது மகாராஜா, காஞ்சி நரசிம்மவர்ம சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டவில்லை. வடக்கே படையெடுத்துப் போயிருந்த சக்கரவர்த்தி திரும்பி வந்து விட்டாராம் நமது மகாராஜா நாலு வருஷமாய்க் கப்பம் கட்டாததற்கு முகாந்திரம் கேட்பதற்காகத் தூதர்களை அனுப்பியிருக்கிறாராம். அவர்கள் இன்றைக்கு வந்து சேர்வார்களாம்" என்றான் வேலப்பன்.

"இதற்காக யுத்தம் ஏன் வரவேண்டும்? நாலு வருஷத்துக் கப்பத்தையும் சேர்த்துக் கொடுத்து விட்டால் போகிறது!" என்றாள் வள்ளி.

"அதுதான் நம்முடைய மகாராஜாவுக்கு இஷ்டமில்லை. முன் வைத்த காலைப் பின்வைக்க முடியாது என்கிறார்."

இப்படி இவர்கள் பேசிக்கொண்டேயிருக்கும் போது நடு ஆற்றில் படகு வருவது தெரிந்தது. வேலப்பனும் இன்னொருவனும் உடனே திரும்பிப் போய் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் படகு துறையை அடைந்தது. இது பொன்னன் போகும்போது தள்ளிக்கொண்டு போன சாதாரணப் படகல்ல் அழகிய வேலைப்பாடுகளுடன் ஒரு பக்கம் விமானம் அமைத்துச் செய்திருந்த ராஜ படகு. படகின் விமானத்தில் மூன்று பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ராஜகுடும்பத்தினர் என்று தெரிந்து கொள்ளலாம். பார்த்திப சோழ மகாராஜாவும், அருள்மொழி மகாராணியும், இளவரசர் விக்கிரமனுந்தான் அவர்கள்.

அரையில் பூண்ட உடைவாளும், கையில் நெடிய வேலாயுதம் தரித்த ஆஜானுபாகுகளான இரண்டு மெய்க்காவலர்கள் படகின் இரு புறத்திலும் நின்று கொண்டிருந்தார்கள். பொன்னனும் இன்னொருவனும் படகு தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

படகு கரை சேர்ந்ததும், மெய்க்காவலர்கள் இருவரும் முதலில் இறங்கி, "ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜகம்பீர, சோழ மண்டலாதிபதி பார்த்திப மகாராஜா, பராக்!" என்று கூவினார்கள். கரையில் நின்ற வீரர்கள் அவ்வளவு பேரும் கும்பிட்ட கைகளுடன் "மகாராஜா வெல்க" என்று எதிரொலி செய்தார்கள்.

படகைவிட்டு இறங்கியதும் மகாராஜா பொன்னனுடைய குடிசைப் பக்கம் நோக்கினார். குடிசை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வள்ளியின் பேரில் அவருடைய பார்வை விழுந்தது. உடனே கையினால் சமிக்ஞை செய்து அழைத்தார். வள்ளி விரைவாக ஓடிவந்து தண்டனிட்டாள். மகாராஜா எழுந்திருக்கச் சொன்னவுடன் எழுந்து பொன்னனுக்குப் பின்னால் அடக்க ஒடுக்கத்துடன் நின்றாள். "வள்ளி! உன்னைப் பொன்னன் நன்றாகப் பார்த்துக் கொள்கிறானா?" என்று மகாராஜா கேட்டார். வள்ளி தலையைக் குனிந்து கொண்டு புன்னகை செய்தாள். பதில் சொல்ல அவளுக்கு நா எழவில்லை. அப்போது மகாராணி "அவளை அப்படி நீங்கள் கேட்டிருக்கக்கூடாது பொன்னனை நீ நன்றாகப் பார்த்துக் கொள்கிறாயா?" என்று கேட்டால் பதில் சொல்லுவாள்" என்றாள்.

மகாராஜா சிரித்துவிட்டு "வள்ளி! மகாராணி சொன்னது காதில் விழுந்ததா? பொன்னனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அந்தண்டை இந்தண்டை போக விடாதே. உன்னை வெள்ளத்திலிருந்து கரை சேர்த்தது போல் இன்னும் யாரையாவது கொண்டு வந்து கரை சேர்த்து வைக்கப் போகிறான்!" என்றார்.

வள்ளிக்கு வெட்கம் ஒரு பக்கமும், சந்தோஷம் ஒரு பக்கமும் பிடுங்கித் தின்றன. தேகம் நூறு கோணலாக வளைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், பொன்னனோ இந்த 'ரஸ்யப் பேச்சைக் கவனித்ததாகவே தெரியவில்லை. அவன் இரு கரங்களையும் கூப்பி, "மகாராஜா! ஒரு வரங் கொடுக்க வேணும்! யுத்தத்துக்கு மகாராஜா போகும்போது அடிமையையும் அழைத்துப் போகவேணும்" என்றான்.

மகாராஜா சற்று நிதானித்தார். பிறகு சொன்னார்: "பொன்னா! உன்னுடைய மனது எனக்குத் தெரியும். ஆனாலும் நீ கேட்ட வரம் கொடுக்க முடியாது. நீ இங்கே தான் இருக்க வேண்டும். போர்க்களத்திலிருந்து நான் திரும்பி வராவிட்டால், இளவரசருக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன் தெரிகிறதா?" என்றார். இதைக் கேட்டதும் பொன்னன் வள்ளி இருவருடைய கண்களிலும் நீர் ததும்பிற்று. மகாராணி அருள்மொழித் தேவி ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். அவளுடைய உள்ளத்தில் என்னென்ன சிந்தனைகள் கொந்தளித்து எழுந்தனவோ, யார் கண்டது!

மகாராஜாவும் பரிவாரங்களும் வெகு தூரம் போன பிறகுதான் வள்ளி பழைய வள்ளியானாள். அப்போது பொன்னனைப் பார்த்து, "பார்த்தாயா! மகாராஜா என்ன சொன்னார்கள்! என்னைக் கேட்காமல் அந்தண்டை இந்தண்டை போகக்கூடாது தெரியுமா?" என்றாள்.

"அப்படியானால் இப்போதே கேட்டு விடுகிறேன். வள்ளி, இன்று மத்தியானம் நான் உறையூர் போகவேண்டும்" என்றான் பொன்னன்.

"உறையூரிலே என்ன?" என்று வள்ளி கேட்டாள்.

"இன்றைக்குப் பெரிய விசேஷமெல்லாம் நடக்கப் போகிறது. காஞ்சியிலிருந்து கப்பம் கேட்பதற்காகத் தூதர்கள் வரப்போகிறார்களாம். மகாராஜா 'முடியாது' என்று சொல்லப் போகிறாராம். நான் கட்டாயம் போக வேணும்" என்றான் பொன்னன்.

அப்போது வள்ளி இரு கரங்களையும் குவித்துக் கொண்டு குரலைப் பொன்னன் குரல்போல் மாற்றிக் கொண்டு, "மகாராஜா! எனக்கு ஒரு வரம் கொடுக்க வேணும் மகாராஜா யுத்தத்துக்குப் போனால் அடிமையையும் அழைத்துப் போகவேணும்" என்றாள்.

"சே, போ! இப்படி நீ பரிகாசம் செய்வதாயிருந்தால் நான் போகவில்லை" என்றான் பொன்னன்.

இந்த உறுதியுடனேயே பொன்னன் சாவகாசமாகக் காவேரியாற்றில் இறங்கி நீந்திக் கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் "டக்டக், டக்டக்" என்ற குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டதும் அவனுக்குச் சொல்ல முடியாத பரபரப்பு உண்டாயிற்று. கரையேறி ஓடி வந்து பார்த்தான். வள்ளியும் குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் முதலில் ஒரு குதிரையும், பின்னால் நாலு குதிரைகளும் கிழக்குத் திசையிலிருந்து அதிவேகமாய் வந்தன. முதல் குதிரையின் மேல் இருந்தவன் கையில் சிங்க உருவம் வரைந்து கொடி பிடித்துக் கொண்டிருந்தான். குதிரைகள் உறையூரை நோக்கிப் பறந்தன.

"சிங்கக் கொடி போட்டுக் கொண்டு போகிறார்களே, இவர்கள் யார்?" என்று வள்ளி கேட்டாள்.

மெய்ம்மறந்து நின்ற பொன்னன், திடுக்கிட்டவனாய் "வள்ளி! இவர்கள்தான் பல்லவ தூதர்கள், நான் எப்படியும் இன்று உறையூர் போகவேணும், நீயும் வேணுமானால் வா! உன் பாட்டனையும் பார்த்ததுபோல இருக்கும்" என்றான்.

கனவு வளரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

E-m@il : I.I.T@wow.lk
T.P. No : 021 4591920
Mobile : 0773 049828
0773 049886

RDS Building,
K.K.S. Road,
Mallakam.

## கணினித் துறையில் தேர்ச்சியடைய IIT Computer Center

உங்களுக்கு வழங்கும் சலுகைகள் சில...

- ஒவ்வொரு வாரமும் கற்கைநெறிகள் ஆரம்பம்...
- வார, வாரஇறுதி, இரவுநேர வகுப்புகள்...
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்...
- இலகுவான தவணைக் கட்டண வசதி...
- வரையறையற்ற செய்முறை நேரங்கள்...

Diploma in Ms Office
Diploma in Advanced Windows Application
Diploma in Web Designing
Diploma in Video Editing
Diploma in Desktop Publishing
Internet & Email
Diploma in Computer Networking
Diploma in Hardware Engineering
Diploma in Maya
Diploma in Software Engineering
Diploma in Autocad
Children Kids

**Association with**

Hiway Informatics

**Validation with**

COMMISSION FOR CONTINUOUS LEARNING (CCL - UK)

IRISH INTERNATIONAL UNIVERSITY (IIU - European Union)

LONDON EXECUTIVE SCHOOL (LES - UK)

# Smart Printers

## *All Kind of Print Solution Centre*

- *General and Commercial Off-set Printers & Screen Printers*
- *Computer Graphic Designers*
- *High Quality Production*

**Call as: @ 0777250850, 0777252022**

**717, K.K.S. ROAD, JAFFNA.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரமா தந்திரமா?

## வெறும் கையில் வீபூதி வரவழைத்தல்

எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மந்திரமா? தந்திரமா? எனும் விழிப்புணர்த்தும் பகுதிக்கு பலரிடமிருந்தும் பெரும் ஆதரவு கிடைத்துள்ளதையிட்டு மகிழ்வடைவதுடன், இது சம்பந்தமான உங்கள் கருத்துக்களையும் தனிப்பட்ட முறையில் நீங்கள் கண்ட, கேட்ட அனுபவங்களையும் எமக்கு எழுதி அனுப்பினால் அவற்றின் தரத்தை பொறுத்து எமது பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்வோம்.

இம் முறை நாம் பொதுவாக கேள்விப்படும் மற்றொரு செயற்பாட்டை பற்றி பார்ப்போம்.

### வெறும் கையில் வீபூதி வரவழைத்தல்

பெரும்பாலான கோவில் சாமியார்கள் செய்யும் பொதுவான செய்கை. வெறும் கையில் வீபூதி வரவழைப்பதுதான். இதற்கு பலரும் பல வழிகையாள்வார்கள். சிலர் இரசாயன ரீதியான செயன் முறைகளை கைக்கொள்வர். ஆனால் நாம் இங்கு எளிய முறையொன்றை இங்கு பார்ப்போம்.

### தேவை

விபூதி, கற்பூரம், சந்தனம், சோறு வடித்த கஞ்சி.

### தயாரிப்பு

விபூதி, கற்பூரம், சந்தனம் எல்லாவற்றையும் சோறுவடித்த கஞ்சியில் போட்டு அடர்த்தியாக கரைத்து, சிறு சிறு மாத்திரை போல தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### செயல்

பார்வையாளர்களில் எவரையேனும் அழைத்து வெறுங்கையை காட்டிவிட்டு, பின் விரலிடுக்கில் மறைத்து வைத்திருக்கும் விபூதி வில்லைகளை எடுத்து உடைத்து விபூதி பவுடராக கொடுக்கலாம். சிறு சிறு வில்லைகளை விரலிடுக்கில் நிறைய வைத்துக் கொள்ள இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியமும் காவியமும் -1

இந்த ஓவியத்திற்கான உங்கள் காவியவரிகளை நீங்கள் அனுப்பிவைக்கவேண்டிய இறுதி திகதி 30.08.2005

நிபந்தனை: கவிதையின் அளவு 8 வரிகளுக்கு மேற்படலாகாது.



அனுப்பவேண்டிய முகவரி

ஓவியமும் காவியமும்
**வேடிக்கை,**
*140, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உன் வரவுக்கு பூத்தூவ
தேவதைகள் வரவில்லை..
காரணம்,
உன்னை ஸ்பரிசிக்கும்
தகுதியுள்ள பூக்கள்
அவற்றுக்கு கிடைக்கவில்லை...
ஆமாம்,
மாம்பழக் கன்னங்களுடன்
மாதுழம்பழ வெடிப்பாய்
நீ சிரிக்கும் சிரிப்புக்கு
நிகரான பூ
இருந்தாலல்லவா கிடைப்பதற்கு!

உன் இருப்பிற்கு வழிகாட்ட
விண் மீன்கள் ஜொலிக்கவில்லை
காரணம்,
ஆயிரம் சூரிய ஒளியாய் உன்மலர்வில்
அதன் ஒளி அமரத்துவமானது.

- சஜீபன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் இருந்தது

# யாழ் நல்லூரிலா? பூநகரி நல்லூரிலா?

**போர்**த்துக்கேயரின் இலங்கை வருகைக்கு முன்னர் இங்கிருந்த மூன்று இராச்சியங்களுள் வட இலங்கையில் இருந்த இராச்சியமாகிய ''சிங்கை நகர்'' குடாநாட்டினுள் இருக்கவில்லை. மாறாக குடாநாட்டிற்கு வெளியே பூநகரிப் பகுதியில் தான் இருந்திருக்க வேண்டும் எனச் சில ஆய்வுகள் நிலைநாட்ட முயல்கின்றன.

வரலாற்று காலத்தில் பூநகரிப்பகுதியும் தமிழ் அரசர்களின் முக்கிய ஆட்சிமையமாக விளங்கியுள்ளமை கடந்த கால ஆய்வுகளில் நிருபணமாகியுள்ளது. "பூநகரிப் பகுதி தமிழரசின் தலைநகரமாக ஒரு காலத்தில் விளங்கியது" எனும் முடிவு நிருபிக்கப் படுவதானது தமிழரசின் வரலாற்றில் காணப்படும் பல சிக்கல்களை, குழப்பங்களை தீர்க்க உதவும் ஒரு முடிவாக அமையும்.

உதாரணமாக, யாழ்பாடி எனும் கவிராகவனுக்கு தமிழ் மன்னன் பாலசிங்கமகாராஜா யாழ்ப்பாண மணற்திட்டை பரிசாக வழங்கினார் என்றும், சேனன், குத்திகன், எல்லாளன் முதலான தமிழ் மன்னர்கள் சோழ நாட்டிலிருந்து தென்னிலங்கை அரசுகள் மீது படையெடுக்கவில்லை, அவர்கள் நிலை நாட்டிய தமிழரசின் தலைநகராகிய பூநகரி பகுதியிலிருந்தே படையெடுத்துள்ளனர் என்றும் முடிவுக்கு வரலாம்.

மேலும், சிங்கை நகர் என்பது, யாழ் குடாவுள் அமைந்துள்ள வல்லிபுரப்பகுதியோ, நல்லூரோ, கந்தரோடையோ அல்ல என நிருபிக்கப்படின், நல்லூர் கந்தசுவாமி கோவில் முதன் முதல் கி.பி. 948ல் புவனேகபாகு எனும் சோழ அரசனின் பிரதிநிதியால் பூநகரியிலுள்ள நல்லூர் எனுமிடத்தில் கட்டப்பட்டது என்றும் இந்த கோவிலையே கி.பி. 1450ல் சிறீசங்கபோதி புவனேகபாகு எனப்படும் செண்பகப் பெருமாள் இளவரசன் தென்னிலங்கை யிலிருந்து படையெடுத்து வந்து அழித்தான் என்பதும் தெளிவாகும். கோவிலை அழித்த மன்னனே புதிதாக கோவிலை யாழ்குடாவில் நிறுவிய போது அது இடம்பெற்ற இடம் 'நல்லூர்' எனும் பெயரை பெற்றது என தெளிவாகும்.

ஆயினும் நல்லை கந்தன் ஆலயம் இன்று இருக்கும் இடம் கூட செண்பகப் பெருமாள் கோவிலை நிறுவிய இடத்திலிருந்து சற்று நகர்ந்துள்ளது என்பது அண்மைக்கால வரலாற்று முடிவுகள்.

ஒல்லாந்தரின் வரவின் பின் இந்து தூபங்கள் இடிக்கப்பட்டு அதன் கற்களை கொண்டு கிறிஸ்தவ ஆலயங்களும் கோட்டைகளும் கட்டப்பட்டன. அவ்வாறு இடிக்கப்பட்ட கோவில்களுள் இன்று முத்திரைச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள சங்கிலியன் சிலைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றிருந்ததாக கருதப்படும் செண்பகப்பெருமாள் கட்டிய கந்தன் ஆலயமும் இடிக்கப்பட்டது. மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சியின் போது கோவில் புதுப்பிக்கப்பட்ட போது இன்றுள்ள இடத்தில் நிறுவப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் உரைக்கின்றார்கள்.

-ஜேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்துச் சண்டை



இன்று குத்துச்சண்டை வீரர்கள் கிளவுஸ் மாட்டிக்கொண்டு கோதாவில் இறங்குகிறார்களே - அவர்கள் ஒரு காலத்தில் கிளவுஸ் அணிந்து கொள்ளாமல் வெறுங்கையுடன் சண்டை போட்டார்கள் என்ற செய்தி எத்தனை பேருக்குத் தெரிந்திருக்க முடியும்? வெறுங் கையினால் குத்திக்கொண்டால் முகம் கிழிந்து போகாதோ? கிழிந்து போகும். முகம் மட்டுமா கிழியும்? குத்துப்படுகின்ற இடம் அனைத்துமே ரணகாயமாகிக் கட்டுப் போட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும்.

கைக்கு கிளவுஸ் அணிவது ஒருபுறமிருக்கட்டும், இன்றைய நாட்களில் 3 ரவுண்ட் சண்டைதான் பெரும்பாலும் நடைபெறுகின்றதைப் பார்க்கிறோம். ஒலிம்பிக்கில் கூட 3 ரவுண்ட் என்றுதான் குத்துச்சண்டை போட்டிக்கு காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் பரிசுப் போட்டிகள் என்ற பெயரில் நடக்கும் குத்துச்சண்டை போட்டிகளில் 15 ரவுண்டு என நிர்ணயித்திருக்கிறார்கள். முற்காலத்தில் குத்துச்சண்டை என்றால் குறைந்தபட்சம் 50 ரவுண்டு சண்டை என்று கூட நடந்ததுண்டு. காலையில் குத்துச்சண்டை வீரர்கள் கோதாவில் இறங்கி விட்டார்களென்றால்மாலை மங்கி இருள் முடிந்த பின்பே சண்டை நிறுத்தப்படும். அதற்கிடையே, போட்டியாளர்களில் ஒருவர் எதிராளியின் குத்து விழுந்து அதைத் தாங்க முடியாது தரையில் சாய்ந்து விட்டாலோ, அல்லது எதிராளியின் குத்துகளைச் சரமாரியாக வாங்கிக் கொண்டு முகமெல்லாம் வீங்கியும் கிழிந்தும் போய்விட்டால் அதற்குமேலும் சண்டையை போட முடியாது என்கிற நிலை ஏற்பட்டாலே மட்டுமே சண்டை இடையில் நிற்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

கி.மு. 686 இல் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமான காலத்திலேயே, குத்துச்சண்டை போட்டியும் ஒலிம்பிக் நிகழ்ச்சியில் இடம் பெற்றுவிட்டது. இன்னும் சொல்லப்போனால், மெசபெ தோமியாவில் கி.மு. 1750 இல் குத்துச்சண்டை நடைமுறையில் இருந்தது என்பர். ஆதாரபூர்வமாகக் கிடைத்திருக்கம் ஒரு செய்தியில் கி.மு. 900 ஆம் ஆண்டிலிருந்தே குத்துச்சண்டை பிரபலமான ஒரு விளையாட்டுப் போட்டியாக மதிக்கப்பெற்றது. கிரேக்கப் பேரரசனான தெஸ்யூஸ் திடகாத்திரமான பலசாலிகளைப் பொறுக்கியெடுத்து தனது பட்டாளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துக் கொள்ளுவானாம். அவர்களில் அதிபலசாலிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஜோடி ஜோடியாகப் பிரித்து, கோதாவில் விட்டு குத்துச்சண்டை போடச் செய்வானாம் பேரரசன். கோதாவில் வெற்றி பெற்றவர்களையே போர்க்களத்திற்கு அனுப்புவானாம். ஆகவே தெஸ்யூஸ் காலத்திலேயே குத்துச்சண்டையானது அறிமுகமாகி விட்டது என்பது உறுதியாகிறது. அவ்வாறு தோன்றிய குத்துச் சண்டை வீரர்களில் கிரேக்கத்தைச் சார்ந்த தியாகெனிஸ் என்பவன் குத்துச்சண்டையில் சமர்த்தனாகவும் மாவீரனாகவும் பிரசித்தமடைந்திருந்தான்.

அவன் தனது பலத்தைப் பிரயோகித்து எதிராளியை ஒரே குத்தில் வீழ்த்திவிடும் ஆற்றலுடையவனாய் இருந்தான் என்றும் ஒரு தகவல் கூறுகிறது. அந்த தியாகெனிஸ் 1,425 எதிராளிகளைக் குத்துச்சண்டையில் வீழ்த்தியிருக்கிறான் என்கிற செய்தி நமக்கெல்லாம் பிரமிப்பும் மலைப்பும் தரும் செய்தியாகத்தான் உள்ளது. அந்த மாவீரன் எதிராளிகளை ஒருவர் பின் ஒருவராகக் குத்தி வீழ்த்திக்கொண்டே இருப்பானாம். ஒருவன் வீழ்ந்ததும், அடுத்தவன் ஒருவனை மோதுவதற்குத் தயாராகி விடுவான். அவனையும் ஒரே குத்தில் மண்ணைக் கவ்வும்படிச்செய்துவிட்டு அடுத்தவனுக்காகக் காத்திருப்பான் தியாகெனிஸ். அவ்வாறாக அவன் வீழ்த்திய எதிராளிகளின் எண்ணிக்கை தான் மேலே சொல்லப்பட்ட 1,425. ஆம், அத்தனை பேரையும் ஒரே காலகட்டத்தில் ஒருவன் பின் ஒருவனாக அவன் வீழ்த்தியிருக்கிறான்.! ஆச்சரியமான தகவல்தான்! ஆனால் உண்மையானது தான்.

கிரேக்கர்களைப் பார்த்து ரோமானியர்களும் குத்துச் சண்டை வித்தையைக் கற்றுக்கொண்டார்களாம். கிரேக்கத்தை ரோமானியர் ஆட்சி நடத்திய காலகட்டத்தில் அங்கு கரமுஷ்டியுத்தம் என்ற குத்துச்சண்டை வித்தையை கற்றுக்கொண்டார்கள் எனத் தெரிகிறது. அதற்காக ரோமிலிருந்து பலசாலிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கத்திற்கு வரவழைத்துக் குத்துச் சண்டை பயிலச் செய்தார்கள் ரோம ஆட்சியாளர்கள். ஆயினும் அவர்கள் கிரேக்கர் செய்யத் தவறியதை ரோமானியர் செய்தனர். அதாவது, குத்தச்சண்டை போடும் போட்டியாளர்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்தான் சண்டையிட வேண்டும் என்பது அந்தப் புதிய அறிமுகம். அதற்கு அவர்கள் வளையம் என்று பெயரிட்டார்கள். அதுவே காலப்போக்கில் 'ரிங்' Ring என்று பிரபலமாகிவிட்டது. ரிங் என்றாலே குத்துச்சண்டை கோதா என்று பொருள்படுகின்ற ஒரு சொல்லாக அது அமைந்துவிட்டது. வட்டத்தை விட்டு வெளியெ சென்றவர் தோல்வியடைந்தவராகத் தீர்ப்பளிக்கப்படுவார் என்றும் அக்காலத்தில் 'விதி' செய்திருந்தார்கள். தற்காலக் குத்தச்சண்டை கோதா சதுரவடிவில் மேடை அமைக்கப்பட்டிருப்பது பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதலேயாகும்.

குத்துச்சண்டையின் பிறப்பைப் பற்றி இன்னொர சுவையான செய்தியும் உண்டு. கி.பி. 1201 இல், இத்தாலியைச் சார்ந்த சியனா என்ற ஊரில் புனித பென்னார்டைன் என்ற பாதிரியார், தன்னுடைய பங்குப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தற்காப்புக்காகக் குத்துச்சண்டையைப் பழக்கிவிட்டாராம். பலசாலியொருவன் அப்பாவி மக்களைத் தாக்க வரும் தருணத்தில் தன்னைத் தற்காத்துக்கொள்வதற்காக, தனது கரமுஷ்டியால் எதிராளியின் குத்தைத் தடுப்பதற்கு உதவட்டும் என்றுதான் அவர் முதல்முதலாகத் தமது மக்களுக்கு இதைப் பழக்கினார். காலப்போக்கில் தற்காப்பு என்பது மறைந்துபோய் தாக்குவதற்கு என்று பயன்படுத்தப்பட்டது குத்துச்சண்டை.

கிரேக்கத்திலிருந்து ரோமாபுரிக்குத் தாண்டிய குத்துச்சண்டைக் கலையானது இங்கிலாந்துக்கும் பரவியது. 17-வது நூற்றாண்டில் குறிப்பாக சொல்லவேண்டுமாயின் 1681 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் ஒருநாள் லண்டன் மாநகரில் ஆல்பிமார்லி கோமகன் முன்னிலையில் ஒரு குத்துச்சண்டை போட்டிநடந்தது. அதில் பங்குகொண்டவர்கள், கோமகனின் பணியாட்கள். கோமகனின் அரண்மனையில் சமையற் பிரிவில் ஒருவன் சமையற்காரனாகவும், மற்றவன் கசாப்புக் காரனாகவும் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் மிகவும் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியவர்களாயிருந்த போதிலும் போட்டி என்று வந்துவிட்டால் நேசத்தையும் பாசத்தையும் துறந்து நேரடியாக சண்டைபுரிந்தார்கள். அந்தச் சண்டையின் முடிவில் ஒருவன் வெற்றி கொண்டபின், மற்றவன் தரையில் பேச்சு மூச்சின்றி விழுந்து கிடந்தான்.

இந்தக் குத்துச்சண்டைப் போட்டியைப் பார்த்துவிட்டு, பிராட்டஸ்டெண்ட் மெர்க்குரி என்ற பத்திரிகையில் ருசிகரமான சண்டை வெளியாகியிருந்தது. ஆகவே 1681ல் லண்டனில் குத்துச்சண்டை அரங்கேறிவிட்டது என்பது ஆதாரபூர்வமாக உறுதியாகிறது. இன்னுமொரு தகவல் என்னவெனில், குத்துச்சண்டையின் தொட்டில் (Cradle of Pugilism) என்ற இங்கிலாந்தை வர்ணித்தது ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை.

இனிவரும் இதழ்களில் உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர்களின் விபரங்களை பார்க்கலாம்.

அடுத்த இதழில் குத்துச்சண்டையின் பிதா என அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜேம்ஸ் பிக் அவர்களது வாழ்க்கை வரலாறு பற்றிப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்கம்

சதுரங்கம் – அது
அறிவுச் சுரங்கம்!
சிந்தனையால் பந்தலிட்ட
அரங்கம்!
மன்னவன் உயிர்காக்க
அவன்
அன்னவன் வாளேந்தும்
வீரப்போர்!
நெறிதவறா படைவீரரின்
முறை தவறா படை நகர்த்தலில்
கறைபடியாதுருவாகும்
களப்போர்!
எண்ணெட்டு கட்டங்களுள்
எண்ணி காட்டும்
கணிதம்!
பாரதம் படைத்த
நிழல் அரசு!
இன்று
பார்முழுதும் கொடியுயர்த்தி
பகைவென்ற அரசன்!
மூளைக்குள் பொறிகிழப்பும் –
விளையாட்டுலகின்
முடிசூடா மன்னன்.

சஜீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினி - ஷங்கர் - ஏ.வி.எம்

## புதிய படம் அறிவிப்பு



# A.V.M



ரஜினி - ஷங்கர் - ஏவிஎம் கூட்டணி சேரும் புதிய படம் - சிவாஜி!

இளம் நடிகர்களின் சூப்பர் ஸ்டாரிற்கான சண்டைகளுக்கு நடுவே சத்தமில்லாமல் சந்திரமுகி வெற்றியின் மூலம் இன்னும் என் இடம் காலியாகவில்லை என்பதை நிருப்பித்தார் ரஜினி. உடனடியாக அடுத்த படத்துக்கான வேலையைத் தொடங்கிவிட்டார். அநேகமாக பி. வாசுவே டைரக்ட் பண்ணுவார் என்று கோடம்பாக்கத்தில் செய்தி சொல்லப்பட்டது!

தனது ஒவ்வொரு படத்தையும்... ஏற்கனவே நட்பாக இருக்கும் தயாரிப்பாளர்களுக்கு நன்றிக்கடனாக அவரே கூப்பிட்டு படம் பண்ணிக்கச் சொல்வது ரஜினி ஸ்டைல். அந்த வரிசையில் சந்திரமுகியை அடுத்து சொல்லப்பட்ட தயாரிப்பாளர் ஒன்று கவிதாலயா. மற்றொன்று எடிட்டர் மோகனின் ஜெயம் கம்பெனி.

யாருமே எதிர்பாராத வகையில் ஏவிஎம் நிறுவனத்தின் 168வது படத்தில் ஷங்கர் இயக்கத்தில் நடிக்கப் போவதாக அதிகாரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் ரஜினி.

படத்துக்கு அநேகமாக சிவாஜி என்று தலைப்பு வைக்கப்படலாம் என்கிறார்கள். ஏற்கனவே ஷங்கரோடு ஒரு படம் பண்ணுகிற ப்ளானில் பேச்சுவார்த்தை நடந்தது. ஷங்கரும் முதல்வன் படக்கதையைச் சொல்லி கதை விவாதமும் நடந்தது. அப்போதிருந்த அரசியல் சூழலில் இப்படி ஒரு கதையில் நடித்தால் ஏகப்பட்ட யூகங்களுக்கு வழி வகுக்கும் என்பதால், இந்தக் கதையை வேறு யாருக்காவது பயன்படுத்திக் கொள்ளுங்கள். நேரம் வரும்போது நாம் சேர்ந்து ஒர்க் பண்ணுவோம் என்று சொல்லியிருந்தாராம் ரஜினி. இப்போது அந்த நேரம் வந்த சந்தோஷத்தில் இருக்கிறார் ஷங்கர்.

சமீபத்தில் வெளிவந்த அந்நியனைவிட அதிக பட்ஜெட்டில் இந்தப் படத்தை எடுக்கிற ப்ளானில் இருக்கிறது ஏவிஎம் நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-அபிமானியின் பார்வையில்-

# இந்தியன் ஒயில் கிண்ணம்

## இறுதியாட்டம்

**09-08-2005** அன்று.....

ஆர். பிரேமதாச அரங்கு ரசிகர்கள் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது. காரணம் "இந்தியன் ஒயில்" கிண்ண இறுதிப்போட்டி. இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன. இலங்கையில் இரு அணிகளுக்கும் பெருத்த ஆதரவு இருக்கிறது. இரு அணிகளும் சாதிக்க வேண்டும் என்ற அவா. முதற் சுற்றில் இந்தியாவுடன் இரண்டு போட்டியிலும் வென்ற இலங்கை அணி சற்று தெம்புடன் இறங்குகிறது. வெற்றியை நோக்கிச் சென்றோம், விளிம்பில் விட்டு விட்டோம் என்ற ஆதங்கத்துடன் இதில் எமக்குத்தான் வெற்றி என இறங்குகிறது இந்தியா. சிறந்த பலப் பரீட்சை. மைதானத்தைப் பொறுத்த வரை முதலில் துடுப்பாடும் அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். அதுதான் அத்தப்பத்து பூவா, தலையா ஜெயித்ததும் கண்ணை மூடிக் கொண்டு துடுப்பெடுத்தாடுவது என தீர்மானித்தார்.

இறுதிப் போட்டி என்றாலே இந்திய அணிக்கு கசப்புத்தான். இது அனுபவம் தந்த பாடம். இருந்தும் புதிய பயிற்றுவிப்பாளர் என்ற நினைப்புடன் தடுப்பில் ஈடுபட களத்தில் இறங்கினர். எமக்கும் புதிய பயிற்றுவிப்பாளர்தான் சாதிப்போம் என்று சனத்தும், அத்தபத்தும் துடுப்புடன் நுழைந்தனர். போட்டி தொடங்கியது. விறு விறுப்புக்கு பஞ்சமேயில்லை. இந்திய அணியின் ஆரம்பப் பந்து வீச்சு அசத்தலாக இருந்தது.



இலங்கை அணி அமைதியாக தொடங்கியது. ஆனால் ஆசிஷ் நேஹ்ரா பந்து வீச வந்ததும் விக்கட்டுக்கள் வரிசையாக வீழ்ந்தது. மூன்று முன்னனி வீரர்களை இழந்தது இலங்கை அணி. ஆனால் களத்தில் சனத். இது ரசிகர்களுக்கு மகிழ்ச்சி, ராவிட்டுக்கு கலக்கம். ஜெயவர்த்தனாவுடன் இணைந்து சனத் மெதுவாக முன்னேறினார். இதற்கிடையில் சனத் 10 ஓட்டங்களை பெற்றதும் ஒரு பெரும் மைல் கல்லை தொட்டார். அதுதான் 10,000 ஓட்டங்கள். முதற் போட்டியில் தான் கங்குலி அதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். இலங்கை அணிக்கு கிடைத்த கௌரவம் அது. சனத் "அமைதியாக" தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். சனத் ஆக்ரோஷமாக அடிப்பதும், பின்பு தடுத்தாடுவதும் இந்திய அணிக்கு பெரும் இக்கட்டை எற்படுத்தியது. இந்நேரத்தில் சனத்தின் plus point உம் weak point உம் ஆன விக்கட்டுக்களுக்கு இடையில் வேகமாக ஓடுவதை இந்திய அணி நன்கு பயன்படுத்தி "ரன் அவுட்" ஆக்கினர். இலங்கை அணியால் மீள முடியுமா, என எண்ணும் அளவிற்கு 122 ற்கு 4 விக்கட்டுக்கள். ஜயவர்த்தனாவுடன் இணைந்தார் ஆர்னல்ட் இருவரும் அனாசயமாக, லாவகமாக வேகமாக ஓட்டங்களைப் பெற்றனர். இந்திய அணியிடம் இருந்த ஆதிக்கத்தை கைப்பற்றினர். இந்திய அணி களத்தடுப்பில் "வழமை போல" சூரத்தனம் காட்டியது. வீரர்களைத் தாண்டிச் செல்லும் பந்துகளுக்கு எல்லைக் கோட்டைத்தாண்டசிரமம் இருக்கவில்லை. மொத்த ஓட்டம் 300 ஐக் கடக்கும் என பலர் கருதினர். இடையில் மீண்டும் நேஹ்ரா வந்து விக்கட்டுக்களை சரித்தார். விக்கட்டுக்கள் வீழ்ந்ததும் நேஹ்ரா மற்றும் அணிவீரர்கள் போடும் action கள் "ரசிக்கக் கூடியதாக இருந்தது. களத்தடுப்பு வீரர்கள் பந்தை கோட்டை விடுவதும், பந்து வீச்சாளர்கள் அவர்களை பேசுவதும் சாதாரண ஒன்றாக அடிக்கடி நிகழ்ந்தது. இது இந்திய அணியின் 'களத்தடுப்பு' எவ்வாறு இருந்தது எனப் புரியவைத்தது.

அணியின் 50 ஆவது ஓவரில் நேஹ்ரா போட்ட "action" களுக்கு வாஸ் துடுப்பால் பதிலடி கொடுத்தார். நான்குகள் நாலா திசையும் பறந்தன. ஈற்றில் இலங்கை அணி 281 ஓட்டங்கள். கடக்க முடியாத ஒரு ஓட்டஎண்ணிக்கை இது. காரணம் ஆடுகளம் நேரம் செல்லச் செல்ல சுழற்பந்து வீச்சிற்கு சாதகமாகி விடும். இதனால் முதல் 15 ஓவர்களை நன்றாக பயன்படுத்த வேண்டிய தேவை இந்திய அணிக்கு. அதைத்தான் சேவாக் காட்டினார். வாஸைத் தவிர மற்ற பந்து வீச்சாளரை துவம்சம் செய்தார். பந்துகளை அள்ளி அள்ளி எல்லைக் கோடுகளுக்கு அனுப்பினார். அதிலும் சேவாக் தன்னிடம் வசமாக மாட்டிய லொக்குஹெட்டிகேயின் ஒரு ஓவரில் 5 பவுண்டரி, ஒரு ஆறு அடித்தது அவரின் ஆட்டத்தின் சிகரமாக இருந்தது. ஆனால் சேவாக் வாசின் பந்துகளை மரியாதையுடன் தான் எதிர் கொண்டார். சொல்லி எடுப்பது போல வாஸ் சேவாக்கை வீழ்த்தினார். அத்தபத்துவிற்கு மனதினுள் ஆறுதல். இனி தலையிடி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க யாரும் இல்லை என நினைத்திருப்பார். பொதுவாக அப்ரிடி, சேவாக், சனத் போன்றவர்கள் ஆட்டத்தின் போக்கை தலைகீழாக மாற்றுவார்கள். நன்றாக ஆடினால் வெற்றி நிச்சயம். சொதப்பினால் வெற்றியை தாரைவார்த்துக் கொடுப்பார்கள். கங்குலியை நிறைய எதிர்பார்த்தார்கள். அவர் ஏமாற்றினார். வழமை போல தன்னில் பிழையில்லை என்பது போல களத்தை விட்டு வெளியேறினார். ராவிட்டும், யுவராஜ்சிங்கும் ஓட்டங்களை ஆறுதலாகப் பெற்றனர். ஆனால் ஓட்டங்கள் சீராக குவிந்த வண்ணம் இருந்தது. வெற்றியை நோக்கி உறுதியாக முன்னேறினார்கள். ஆனால் யுவராஜ் வழமைபோல தேவையற்ற ஒரு பந்திற்கு தேவையற்ற அடி அடித்து ஆட்டமிழந்து வெளியேறினார். முகமட் கைவ் வந்ததும் கண்டபடி ஓட்டங்களை எடுப்பார் என நினைத்தனர். ஆனால் ராவிட், ஓடி எடுக்க முடியாத ஓட்டத்திற்கு ஓடி 'ரன் அவுட்' ஆனார். இனி என்ன? திருப்தியுடன் ரசிகர்கள். நெஞ்சில் வலியுடன் ராவிட். டோனி நுழைந்ததும் மீண்டும் ஓர் எதிர்பார்ப்பு. அவர் அதை புஸ்வானம் ஆக்கினார். விக்கட்டுக்கள் வேகமாக சரிந்தது. இடையில் ஹர்பஜன்சிங் 'ரன் அவுட்' ஆகி வெளியேறும்போது அவரிற்கு திருப்தியில்லை. இலகுவாக வென்றிருப்பேன் இப்படி ஆகி விட்டதே என்பது போலப் பவிலியன் திரும்பினார். பந்து வீச்சில் ஆட்டங்கள், action கள் போட்ட இந்திய அணி துடுப்பாட்டத்தில் அசடுவழிந்தது. இந்திய அணிக்கு களத்தடுப்பு எப்படி இருக்க வேண்டும் என இலங்கை வீரர்கள் தெளிவு படுத்தினார்கள். மிகவும் அட்டகாசமாக இருந்தது.



பந்துவீச்சில், குறிப்பாக வாஸ், முரளிதரன், சந்தன சிறப்பாக செயல்பட்டனர். உண்மையில் இந்திய வீரர்கள் வாஸ், முரளிதரன் ஆகியோர் சர்வதேசம் போற்றும் சிறந்த வீரர்கள் என அறிந்து மரியாதை கொடுத்தே ஆடினர். முரளிதான் கொடுத்த அழுத்தமே ராவிட் அப்படி ஓடுவதற்கு காரணம். இறுதியில் இலங்கை அணி 18 ஓட்டங்களால் வென்றது. இருந்தாலும் இந்திய அணி பல விடயங்களில் கோட்டை விட்டது. குறிப்பாக டோனியை இறக்கிய இடம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அவர் ஷேவாக் ஆட்டமிழந்ததும் அனுப்பியிருந்தால் சில வேளைகளில் நிலைமை மாறி இருக்கலாம். அத்தபத்து பந்து வீசாளர்களை மாற்றிய விதம் நன்றாக இருந்தது. குறிப்பாக டில்ஷானை பயன்படுத்தியது அவரிற்கு பெரிய வெற்றியை தந்தது. சனத் பந்து வீச வந்து ஒரு பந்து வீசியதும் கையைப் பிடித்தார். வலி தாளாமல் வெளியேறினார். இது பெரும் பின்னடைவாக இருந்தது. ஆனாலும் இலங்கை வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர். ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் மஹேல ஜயவர்த்தனா தெரிவு செய்யப்பட்டார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோப்பையை அத்தபத்துவிடம் அளித்தார். இந்திய அணிக்கு தொடர்ந்தும் கவலை. மீண்டும் ஒரு இறுதியாட்டம். மீண்டும் ஒரு தோல்வி. இது தொடருமா? அடுத்த சிம்பாப்வே முக்கோணத் தொடரில் இதற்கு முற்றுப்புள்ளி கிடைக்குமா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். மீண்டும் வங்கச நாயகன் தலைமைப்பதவியை ஏற்றுள்ளார். யார் என்ற யோசிக்கிறீர்களா? கங்குலிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பே நலமா???

# நீரிழப்பு

காண்டீபன்

''காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா....'' பாடிக்கொண்டு நுழைந் தான் சங்கர். பக்கத்து வீட்டு சுட்டிப் பையன் எங்கள் ஊர் பாடசாலை யில் ஆண்டு 10 படிக்கிறான். நாளும் ஏதாவதொரு 'டவுட்' உடன் தான் வந்திடுவான். அவனுக்கு விளக்கம் சொல்லி புரியவைப்பது எனக்கு பொழுது போக்கு.

"என்னடா இன்றைக்கு சித்தர் பாடலோடு வருகிறாய்?" வினாவினேன் நான். "இல்லை அண்ணா எங்கட உடம்பில் 60% தண்ணீர் என்று படித்தோமே, அப்ப வெறும் காற்ற டைத்த பை எண்டு சொல்லுறது பொய் தானே?" அவன் பதிலில் படித்ததை பிரயோகிக்கும் ஆர்வம் தெரிந்தது.

நானும் "நீ சொல்வது சரிதானடா எமது உடலில் பெரும் பாகம் நீர் தான், ஆனால் சித்தர் பாடியதும் பிழையில்லை. உயிர் போவதை 'மூச்சு போட்டுது' என்று தான் சொல்வது வழமை, 'தண்ணீர் போட்டுது' என்று சொல்வதில்லையல்லவா. காற்றும் நாம் உயிர் வாழ்வ தற்கு அவசியமான ஒன்றுதான்". "அப்ப அண்ண, தண்ணீர் இல்லாவிட்டால் ஆக்கள் சாக மாட்டினமோ?'' வினாவினான் சங்கர்.

"அப்படியில்லடா நீரிழப்பு என்பது இறப்பிற்கு ஒரு முக்கியமான காரணம். காற்றில்லாமல் இறப்பதை விட நீரில்லாமல் இறப்பதற்கு சிறிது காலம் கூடுதலாகச் செல்லும்."

"நான் தண்ணீர் குடிக்காமல் விட்டால் நீரிழப்பு வருமா அண்ண?" ''நிச்சயமாக, ஆனால் உனக்கு நீரிழப்பு ஏற்படும் போது முதலில் தாகம் எடுக்கும். உடனே நீ தண்ணீர் குடித்துவிடுவாய், அப்படி உன்னால் தண்ணீர் குடிக்காமல் முடியாது போனாலோ, அல்லது நீரிழப்பு வேகம், நீ தண்ணீர் குடிக்கும் அளவை விட கூடுதலாக இருந்தாலோ பிரச்சனை ஏற்படும். நீரிழப்பு முக்கிய பிரச்சனையாக இருப்பது சிறு குழந்தைகளுக்குத் தான். ஏன்? சொல்லு பார்ப்போம்?"

"அது அண்ணா. வந்து....ஆ.. தெரியும் ஏனென்றால் அதுகளுக்குத் தண்ணீா விடாய்க்குது என்று கேட்கத் தெரியாது தானே?" "கெட்டிக்காரன், அத்தோடு சிறு குழந்தைகளுக்கு நீரிழப்பின் வேகமும் அதிகம். ஏனென்றால் அவர்களின் மேற் பரப்புக் கனவளவு விகிதமும் அதிகம். மேற்பரப்பு கூடகூட ஆவியாதல் அதிகம் என்று உனக்குத் தெரியும் தானே?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறு குழந்தை களுக்கு எப்ப அண்ணா நீரிழப்பு ஏற்படும்?" "சிறு குழந்தைகளில் நீரிழப்பு ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் வயிற்றோட்டம். அத்துடன் காய்ச்சல் அதிகம் இருந்தாலும் நீரிழப்பு ஏற்படும் சாத்தியம் அதிகம்."

"அப்ப அண்ணா, வயிற்றோட்டம் வந்தால் பிள்ளையை உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவேணும் இல்லையா?"

"அப்படியல்ல, பிள்ளைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டால் முதலில் மலத்தோடு இரத்தம் போகிறதா என்று பார்க்கவேண்டும். அப்படி இரத்தம் போனால் வைத்தியரை நாடவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த முக்கிய விடயம் நீரிழப்பை ஈடுசெய்தல் தான்."

"நாங்கள் எப்படி அண்ணா நீரிழப்பை கண்டுபிடிக்கிறது?" "அதற்கு சில வழிகள் உண்டு. உதாரணமாக குழந்தை எப்பொழுதும் அழுதபடி இருக்கும், உதடு, நாக்கு உலர்ந்திருக்கும், கண்களில் நீர் உட்குழிந்து இருக்கும், அழுதாலும் கண்களில் நீர் வராது, தலையில் முன்னுச்சிப் பகுதியிலுள்ள பொருத்துகளிற்கிடையான இடைவெளி (Anterior Jontanel) பதிந்து இருக்கும், குழந்தை சலம் போகும் அளவு குறையும் இவற்றை வைத்து நீரிழப்பை கண்டு பிடிக்கலாம். இந்த நேரத்தில் குழந்தைக்கு இயலுமானவரை நீராகாரம் வழங்கவேண்டும்".

"இந்த நேரத்தில் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும் சங்கர். அது என்னவென்றால் குழந்தைக்கு நீராகாரம் வழங்கும்போது சிறிது சிறிதாக ஒரு தேக்கரண்டியிலோ அல்லது மேசைக்கரண்டியிலோ பருக்க வேண்டும். இல்லாவிடில் குழந்தை தண்ணீர் விடாயில் அதிகம் குடித்து வாந்தி எடுத்துவிடும்."

"ஓமண்ண நானும் தண்ணீர் விடாய்த்தால் மடக் மடக் என்று ஒரு குடத்தையே காலி பண்ணிவிடுவேன். அது சரி குழந்தைக்கு நீரிழப்பைத் தடுக்க பச்சைத்தண்ணீர் கொடுத்தால் போதுமா அண்ணா?"

"நல்ல கேள்வி சங்கர், அதற்கு தான் ORS (Oral Rehydration Salt) அல்லது ஜீவனி (Jeevani) எனும் பதார்த்தம் கொடுப்பது சிறந்தது. ஒரு வேளை பிள்ளை கடுமையாக வாந்தியெடுத்தாலோ அல்லது வாயால் எதையும் பிள்ளை எடுக்க மறுத்தாலோ வைத்தியரை நாட வேண்டும்."

"அப்ப அண்ண நீரிழப்பை வெல்ல ஒரே வழி எவ்வளவு போனாலும் அவ்வளவு வாயால் குடிக்க வேண்டும், அப்படித்தானே." "ஓம் சங்கர், வயிற்றாலே போகுது என்று கவலைப்படாமல் போகும் அளவை ஈடு செய்ய நன்றாக குடிக்க வேண்டும். (தண்ணீர்). "நன்றி அண்ணா, எனக்கு சாதுவாய் தண்ணீர் விடாய்க்குது உடனே குடிக்கவேணும் போயிட்டு வாறன்." என்று ஓடினான் சங்கர். நானும் "நீரின்றி அமையாது உலகு" என்று முணுமுணுத்தபடி எனது வேலையில் மூழ்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FIRST MANPOWER CENTRE & JOB AGENTS

யாழ்மண்ணின் வேலையையும் மனிதவளத்தையும் (வேலையாட்களையும்) ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திய ஒரே நிறுவனம்... நீங்கள் செய்ய வேண்டியது...

கற்ற மாணவர்கள், தொழிற் கல்வி பெற்றவர்கள், தொழில் பார்க்க விரும்புவோர் - உங்கள் விபரம்

தொழிலாளர் தேவையானோர், தொழில் வாய்ப்பு உள்ளோர் - உங்கள் விவரம

இவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொடர்புகளுக்கு **Ph.No: 021 222 3298**

230/1, நாவலர் வீதி, யாழ் (ஆனைப் பந்தி அருகாமை)

# POWER GYM

**யாழ் நகரின் தனித்துவம் வாய்ந்த சேவை**
**மூன்றாம் ஆண்டில் காலடி வைக்கும் நேரம்**

உங்கள் உடற்கட்டை மெருகேற்றிப் பேணுவதற்கான மிக நவீன கருவிகள் துறைசார் நிபுணர்களின் நெறிப்படுத்தல் மருத்துவ ஆலோசனைகள் மனதுக்கு இதமான இசைத்தவிழ் சூழல் என்பனவற்றுடன் காலத்திற்கு காலம் உலகில் அறிமுகமாகும் புதிய முறைகளை இணையத் தளத்தில் இருந்து நேரடியாக பெற்று உங்களுக்குத் தருபவர்கள்...

POWER GYM BODY CARE & FITNESS CENTRE

**Ph.No: 021 222 3298**

230/1, நாவலர் வீதி, யாழ் (ஆனைப் பந்தி அருகாமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் முகங்கள்




அன்பின் வேடிக்கை,

வேடிக்கை பத்திரிகையிற் காட்டிய வேடிக்கை ஆரம்பத்தில் எம்மை மிகவும் வியப்படைய வைத்தது. என்னவாக இருக்கும் என நாம் குழம்பிக் கொண்டிருந்த வேளையில் வெளியீட்டு விழா விளம்பரம் கண்ணிற் பட்டது. உண்மையில் அட்டகாசம் போங்க!

'வேடிக்கை' உள்ளடக்கம் வரவேற்கத்தக்கதாக இருக்கின்றது. ஆனால் பக்க அமைப்புகளில் கவனம் செலுத்தியமை காணாதென்றே சொல்ல வேண்டும். விடயங்களின் தரத்தைக் கவனிப்பதில் எடுத்த சிரத்தையை செவ்வை பார்ப்பது தொடர்பாக காணமுடியவில்லை. படங்களை முடிந்தவரை வரைந்து போட்டால் நன்றாக இருக்கும். மாணவர்களுக்கான கல்வி தொடர்பான விடயங்கள் இடம் பெற்றால் சிறப்பாக இருக்கும். எப்படியெனினும் வேடிக்கையின் ஒரு வாடிக்கையாளர் என்று சொல்வதற்கு என்போன்ற பலர் உள்ளார்கள்.

வாழ்க உங்கள் பணி வளர்க!

சுத்தானந்த பாரதி
வவுனியா

---

வேடிக்கையே!

உண்மையில் நீ ஒரு வேடிக்கை தான். இது வரை ஈழத்தில் ஒரு ஜனரஞ்சக சஞ்சிகை வரவில்லை என்ற குறையை நிரப்பும் என்று நம்பவைக்கின்றது. 'சுடுவான் தரும் நெத்தியடி', அபாரம் தொடரட்டும். விளையாட்டுப் பகுதி-''ரங்கிரியவில் ரம்மிய அனுபவம்'' நேரடியாப் பார்த்த உணர்வினை ஏற்படுத்தியது. 'ரொம்பத் தப்பம்மா' அட்டையில் பார்த்ததும் ஏதோவென எண்ண வைத்ததும், உள்ளே பார்த்ததும் இதுவாவென ஆயிற்று. 'சச்சின் ஓய்வு பெறுகிறார்' என்பது ஒரு பேதி மருந்து வாசித்துப் பார்த்ததும் அப்பாடா என்று இருந்தது. 'இருளின் நாயகர்கள்" இன்னும் கொஞ்சம் எழுதினால் நன்று. உங்கள் பணி தொடர என் வாழ்த்துக்கள்

வேணு - வேலணை

வாசகர்களுக்கு நன்றி. இதுபோன்ற ஆரோக்கியமான கருத்துக்களையும் நல்ல விமர்சனங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி



1) விண்வெளிதுறை சாதனைகளில் சமீபத்திய சாதனை இதன் வெற்றிகர பயணமும் தரையிறக்கமும்.

6) பிரச்சினை/ சிக்கல்

7) மேற்கத்திய இசை அணிவகுப்பில் முதல் வரிசையில் வருபவர்களால் வாசிக்கப்படும் வாத்தியம்.

8) களியாட்ட நிகழ்வுகளில் இவ் வேடிக்கை காட்டப்படும்.

9) செய்திகளை இப்படியும் சொல்லலாம்.

11) பெண் பிள்ளைகளை குறிக்கும் ஓர் உறவுமுறை

13) இந்தியாவில் பெண்சிசு கொலைக்கு பயன்படுத்தபடுவது

15) வரிகள் கட்டணங்கள் சேகரிப்பதை இப்படி சொல்லலாம்.

16) பஞ்சபூதங்களுள் ஒன்று

## *மேலிருந்து கீழ்*

1) கசற், CD வரிசையில் தற்போது பாவனையில் உள்ளது.

2) இசையின் அடிப்படை இது.

3) விருந்தாளிகள் வரவை தெரிவிக்கும் ஆகாயதோட்டி

4) நாடு சிறக்க இது உயர வேண்டுமென ஔவையார் சொன்னார்.

5) பாரதியாரின் விருப்பு நாயகி

8) ஏழு வர்ணங்களில் வானில் போட்ட பாலம்

10) நமது சூரிய தொகுதியை உள்ளடக்கிய நட்சத்திர தொகுதி குழம்பியுள்ளது

11) நட்சத்திரங்களில் ஒன்று.

12) கந்தன் மனைவியும் குழம்பியுள்ளாள்.

14) உடல் நலத்துக்கு நல்லது. ஆனால் தலைகீழாயுள்ளது.

*முடிவு திகதி:- 04.09.2005*

*விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வேடிக்கை,**

*140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடித்துப் பார்ப்போம்

தி. கோகுலன்

**ஆசிரியர்:-** டேய் கழுதைக்கு பிடித்த ரொட்டி எது?
**மாணவர்:-** அதை கழுதையிடம் தான் கேட்க வேண்டும்.
**ஆசிரியர்:-** அதுதான், உன்னிடம் கேட்கிறேன்.
**மாணவர்:-**?????

**தோழன்1:-** எனது தோழிக்கு மிட்டாய் வாங்கி கொடுத்தது தப்பாப் போய்ச்சு
**தோழன்2:-** ஏன் அவளுக்கு பூச்சி பிடித்து விட்டதா
**தோழன் 1:-** இல்லை அவள் மிட்டாய்க்காரனோட ஓடிப்போட்டா.

**தோழன்1:-** நீ ஒரு போதும் வாய் திறக்க மாட்டாயே, அந்த வைத்தியர் எப்படித்தான் உனக்கு பல் பிடுங்கினர்?.
**தோழன்2:-** அவர் பல் பிடுங்க 1000 ரூபாய் என்றார் நான் அப்படியா என்று வாய் திறந்தேன். அந்த காப்ல ஒரே பிடுங்கா பிடுங்கி விட்டார்.

**ஆசிரியர்:-** கணக்கில் பூச்சியம் எடுத்திருக்கிறாயே நீ யாரிடம் படிக்கப் போகிறாய்?
**மாணவன்:-** உங்களிடம் தான் சேர்
**ஆசிரியர்:-**?????

**தோழன்1:-** அந்த விளையாட்டுப் போட்டியில் நீ அறிவிப்பாளனாக இருந்தபோது ஏன் ஒரே கூச்சல், குழப்பமாப் போச்சு?
**தோழன் 2:-** அது.. ஒண்டுமில்லை, கணபதிப்பிள்ளை தாச்சிப் போட்டி யில் முதலாவது இடம் என்பதற்குப் பதிலாக கணபதி பிள்ளைதாச்சிப் போட்டியில் முதலாவது இடம் என அறிவித்துவிட்டேன்.
**தோழன்1:-** என்ன...

**தோழன்:-** நீ அடிக்கடி சமயம் மாறிக்கொண்டு இருப்பாய் இப்ப என்ன சமயத்தில் இருக்கிறாய்.
**தோழன்:-** தக்க சமயத்தில்



**பொதுமகன்:-** ஐயா நீங்கதான் உதவி செய்ய வேணும். நான் எட்டு மாதமாத் தேடியும் கண்டுபிடிக்க முடியேல்ல.
**இன்ஸ்பெக்டர்:-** எதை?
**பொதுமகன்:-** சுனாமி நிவாரணத்துக்காக வந்த பொருட்களை!.
**இன்ஸ்பெக்டர்:-** .........?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் குதிரை

முன்னைய நாள் முப்பதாம் நூற்றாண்டுக்குச் சென்று திரும்பிய அனுபவத்தின் குறுகுறுப்புடன் உறங்கிய சுந்தர் மறுநாட் சூரிய உதயத்தை ஆனந்தமாக வரவேற்றான். காலைப் போசனத்தை முடித்துக் கொண்டவன் தனது சிறிய நூல் நிலையத்தினுள் நுழைந்தான்.



எந்தப் புத்தகத்தைப் எடுப்பது என சிந்தித்தவாறு பார்த்துக் கொண்டு சென்றவன் வாண்டு மாமாவின் அழிந்த உலகம் நூலைக் கண்டான். அதனையே வாசிக்கலாம் என உள்ளுணர்வு உந்த அதனை எடுத்துச் சென்று வீட்டின் முற்றத்தில் வேப்ப மரத்தடியில் இடப்பட்டிருந்த பலகையில் அமர்ந்து வாசிக்கத் தொடங்கினான். அதில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த உயிர்களைப் பற்றியும் அவற்றின் வாழ்க்கை முறை பற்றியும் வாசிக்க வாசிக்க அவற்றை நேரில் பார்த்தால் என்ன என்றல் ஆவல் மேலெழத் தொடங்கியது.

நினைத்த இடத்துக்கெல்லாம் செல்லக் கூடிய அதிசயக் குதிரையின் சொந்தக் காரனாகிய அவன் அப்படி ஆசைப்பட்டதில் வியப்பொன்றுமில்லையே. அதிசயக் குதிரையை நினைத்தான். வெண்ணிற மேகம் ஒன்று வேகம் கொண்டு வந்தது போல் அதிசயக் குதிரை அவன் முன்னே வந்து நின்றது. தன்னுடைய பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு என்ன கட்டளை எசமானே! என்றது. அதனை ஆசையோடு தடவியவன் "வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குச் செல்ல வேண்டும்" உன்னால் என்னை கொண்டு செல்ல முடியுமா" என்றான். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா, தாராளமாகச் செல்லலாமே!, ஏறிக் கொள்ளுங்கள் என்று சொன்ன குதிரை வாய் மூட முன்னே தாவி ஏறியவன் ய்யாகூ... போகலாமே ! என்று ஆனந்தக் கூச்சலிட்டான். அந்த விநோதக் குதிரையும் அவனைச் சுமந்து கொண்டு காலப் பயணத்தை ஆரம்பித்தது. ஒளி, இருள், வெப்பம், குளிர் ஆகியவற்றுக்கிடையே நெடுநேரப் பயணம் தொடர்ந்தது. காலங்கள் ஏகத்துக்கு மாறி மாறி வந்தன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அடைந்த குதிரை நிதானித்தது.

அதிலிந்தவாறே அக்காலத்தின் இயற்கையழகை இரசிக்கத் தொடங்கினான் சுந்தர். விஞ்ஞானம் முன்னேறியதும் தொழினுட்பம் விருத்தியடைந்தும் நன்மை என எண்ணிக் கொண்டிருந்தவன் மனதில் அது முற்றுமுழுத் தீமையே என்ற எண்ணம் தலை தூக்கலாயிற்று. இயற்கை எவ்வாறான அழகுடன் பொலிகின்றது. எமது செயற்பாட்டால் அதன் அழகை, இயல்பை எப்படியெல்லாம் சீரழித்து விட்டோம். சீரழித்துக் கொண்டிருக்கின்றோம் என்று எணணிப் பெருமூச்சு விட்டான். இப்படியாக எண்ணமிட்டுக் கொண்டிருந்தவன் தலையில் திடீரென எதுவோவொன்று தாக்கியது. நினைவிழந்து சரிந்தான். அப்போது சுற்றவர இருந்த மரங்களிலிருந்து சில உருவங்கள் திபு திபுவென வெளிவந்தன. குரங்குகளுக்கு மனித வேடம் அணிவித்து விட்டது போற் தென்பட்ட அந்த உருவங்கள் அவனை அலாக்காகத் தூக்கிக் கொண்டு விரைந்தன. கத்தியும் கூச்சலிட்டும் ஏதேதோ ஒலிகளை எழுப்பிக் கொண்டு அருகேயிருந்த மலையொன்றை நோக்கி விரைந்தார்கள். மரங்களில் அநாயசமாகத் தாவினார்கள். அவற்றின் விழுதுகளில் தொங்கித் தாவினார்கள். நிலத்திலே தாவித் தாவிப் பாய்ந்தார்கள். இவ்வாறாக அந்த மலையின் உச்சியை அடைந்தார்கள்.

அந்த மலையின் உச்சி உள்ளத்திலே பெரும் கிலியை விளைவிக்கத் தக்கதாயிருந்தது. ஒரு புறம் கொதிக்கும் வெந்நீர் ஊற்று ஒன்று கலகலத்துக் கொண்டிருந்து. அதன் அருகிலிருந்த மரம்செடிகொடிகள் எல்லாம் கருகிக் காணப்பட்டது அதன் வெம்மையை எட்ட நிற்போரையும் உணர வைத்தது. மறுபுறம் செங்குத்தான அதல பாதாளம். அதனூடாக மேலெழுந்த கானகக் காற்றின் ஊ.... வென்ற இரைச்சல் சூழ்நிலையின் பயங்கரத்தை மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தது. இவற்றை யெல்லாம் ஊதித் தள்ளுமாப் போல் அந்தக் குரங்கு மனிதர்கள் தரையில் கிடந்த சுந்தரைச் சூழ்ந்து சுறறிச் சுற்றி ஆடத் தலைப்பட்டார்கள். காடே அதிரத் தக்கதாக ட்ட டட்ட டோம் .. டோம் டோம் பாம் பூம் பட்டடட் டோம் என்று கூச்சலிட்டுக் கொண்டும், கொம்பு போன்ற ஒன்றை ஊதிக் கொண்டும் குதித்துக் குதித்து ஆடினார்கள். கால நேரம் போவது தெரியாமல் ஆடிக் கொண்டிருந்தார்கள். சூரியன் மேல் வானில் விழத் தொடங்கியதும் ஆடிக் கொண்டே சுந்தரைத் தூக்கிக் கொண்டு சூரியன் மறைவதற்காகவே காத்திருந்தது போல மலை விளிம்புக்குசட சென்றார்கள்.

சுந்தருக்குச் சுயநினைவு திரும்பியது. நொடிப்பொழுதில் நிலைமையை ஊகித்துக் கொண்டான். கதைகளில் வருவது போல சடங்கு முடிந்து தன்னை பாதாளத் தேவதைக்குப் பலி கொடுக்கப் போகின்றார்கள் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிந்து கொண்டவன் அதிசயக் குதிரையை மானசீகமாக

தொடர்ச்சி 59 ஆம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடுருவி... 2

" TASA" வின் விண்வெளி ஆய்வுகூடம் கிடைத்ததொரு அபாய அறிவிப்பால் சுறுசுறுப்புப் பெற்றிருந்து. வெளியே இருந்த கோடை வெயிலைக் கொன்றுவிட்டு உள்ளே ஏசி குளுகுளுத்துக் கொண்டிருந்தது. சினிமாக்களில் காட்டும் டிவி ஸ்டேசன்களைப் போல் கணினித் திரைகள் நாலாபுறமும் ஒளிர்ந்து கொண்டிருந்தன. 'டாஸா' ஊழியர்கள் மிக உன்னிப்பாகத் திரைகளில் மாறுதல்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். கணக்கற்ற மெயில்கள் போவதும், வருவதுமாய் இருந்தன. நொடிக்கொருதரம், தொலைபேசிகள் சிணுங்கிக்கொண்டிருந்ததன் பலனாக வரவேற்புப் பணிப்பெண்ணின் செவ்விதழ் நிறம் முகத்திலும் சற்று ஏறியிருந்தது.

"அதோ..."

"அதோ காணப்பிப்பான் 341 கவனி! "

''உனது திரையில் காட்சியைத் துல்லியமாக்கு"

'டாஸா' வின் கட்டளையதிகாரி கூவினார்.

341 காணப்பிப்பான் துல்லியமானது.

திரையில் காட்சி விரிந்தது.

தமிழீழ வான் பரப்பினுள் நுழையும் திசையில் மர்மப் பொருள் ஒன்று விரைந்து வந்து கொண்டிருந்தது.

"உண்மைதான் தகவல் உண்மைதான்"

''அனைத்து காணப்பிப்பான் இயக்குனர்களும் கவனியுங்கள் கண்காணிப்பு பலமாக இருக்கட்டும்'' மைக்கில் வேழத்தெழிலன் படபடத்தார்!

செய் அல்லது செத்துமடி என்னும் தாரக மந்திரத்தைக் கடைப்பிடிக்கும் ஊழியர்களின் விரல்கள் விசைப்பலகைகளில் வேகமாக இயங்கத் தொடங்கின. ஒலி வாங்கி வேற்றுப்பிரவேச அபாய அறிவிப்பை வெளியிடத் தொடங்கியது.

''கெமாண்டர், அது உள்ளே வந்துவிட்டது."

"கவனித்தேன் திசைகுறி. வேகங்கணி"

"துல்லியக் குறிகாண்பானை திசைப் படுத்து, அதன் பயண வேகம் எவ்வளவு"

"தரையிறங்குமா? மோதுமா?

"விரையுங்கள்.. ம் "

வேழத்தெழிலன் செல் சிணுங்கியது "வேடிக்கை" என CLI காட்டிற்று.

"எப்படியும் மணந்திடும் அவங்களுக்கு, எம காதகர்கள்" மனதுக்குள் நினைத்தவன், பொத்தனை அழுத்திப்பதிலளித்தான்.

"ஹலோ வேழத்தெழிலன், வணக்கம்"

"..................."

"உண்மைதான், இப்போது எமது வான் பரப்பினுள் ஏதோ ஊடுருவல் என்பது மட்டும் சொல்ல முடியும். மற்றையவை பின்பு, நன்றி."

"..................."

மன்னிக்கவும் கமாண்டர், குறுக்கிட்டான் 341 கட்டுப்பாட்டாளன்.

உம், சொல்லு

"தென்கிழக்கு மூலையிலிருந்து 045° தெற்கு திசை கீழ் நோக்கி நிமிடத்துக்கு 30000 கி.மீ வேகத்தில் அந்த மர்மப் பொருள் எமது வான்பரப்பினுள் பிரவேசிக்கும் "

"அதன் பாதை துல்லியமாக எங்கு செல்கிறது என்பதை அவதானியுங்கள்"

"கோட்டை விட்டு விட வேண்டாம்"

"சரி சார்"

குறிகாட்டியை பொட்டாக வந்து கொண்டிருந்த ஊடுருவல் பொருளின் மீது வைத்து பெரிதாக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்துடன் பொருள் துல்லியமானது.

கிரேக்க இதிகாச புராணங்களில் வருகின்ற கற்பனை வாகனம் போலத் தென்பட்டது அந்தப் பொருள்.

"அது ஓர் வானவூர்தியே தான்" என்றான் கமாண்டர் வேழத்தெழிலன்.

அனைவரும் ஆமாமினார்கள்.

''சார் அதனுடைய வேகத்தை கணக்கிடும் போது இன்னும் 40 நிமிடங்களில் எமது நாட்டின் தென் கடற் பகுதியை அடைந்து விடும் போலிருக்கிறது."

''இருக்கலாம், நீங்கள் எதற்கும் ஜாக்கிரதையாயிருங்கள்"

"தமிழன் 301 உடனடியாக விசேட அதிரடிப்படையின் விரைந்து தாக்கும் அணிக்குத் தகவலறிவித்து விடு. தயார் நிலைப் படுத்தச் சொல்"

"700 நீ ஜெட் வாகனங்களை ஒழுங்கு படுத்து"

"ஓகே சார்"

"சார் இங்கே பாருங்கள்" காண்பிப்பான் 341 இன் கட்டுப்பாட்டாளன் கூவினான்.

அனைவரின் பார்வையும் திரும்பின. காண்பிப்பானில் வர்ணஜாலங்கள் தெரிந்தன. சற்று நேரத்தில் காண்பிப்பான் திரைகள் அனைத்தும் இருட்டாகின.

"என்ன வாயிற்று, சிக்னல் இல்லையா?"

"கமோன் குவிக்" வேழத்தெழிலன் இரைந்தான்.

கட்டுப்பாட்டாளர்கள் அனைவரும் தமது வித்தைகள் அனைத்தையும் காட்டினர். காட்டியும் எந்தப் பலனும் இல்லை.

''என்ன நடக்கிறது'' இரைந்தான் வேழத்தெழிலன்.

''உடனே காவல் துறைக்கு அறிவித்துவிடுங்கள்"

திடீரென திரைகளின் இருட்பரப்பில் ஒரு 'பளீர்' ஒளி கிழித்தது. அதனைத் தொடர்ந்து அனைத்து மொனிட்டர்களும் இயல்பு நிலைக்கு வந்தன. ஆனால், ஊடுருவல் வானவூர்தியை மட்டும் எந்த திசையிலும் காணவில்லை.

..............

அந்தக் கிராமத்தை கிராமம் என்று சொல்வதிலும் அதனை ஒரு குடும்பத்தின் தோட்டம் என்று சொல்வதுதான் பொருந்தும். அங்கே ஒரு முதியவர் அமர்ந்திருக்கின்றார். அவரைச் சூழ மக்கள் குழுமி நிற்கின்றனர். ஏதேனும் கொண்டாட்டமாக இருக்கலாம். தமிழ் குழ மக்கள் இலவச உணவு பெறுவதற்கு குழுமி நிற்கின்றார்கள் என்று நினைத்து விட்டிருக்க அது தவறு என்று நிரூபிப்பது போல இருவர் உரையாடிக் கொண்டு செல்கின்றனர்.

" இன்னும் அவர் சீடன் வரவில்லை. அதற்காகத்தான் பெரியவர் காத்திருப்பது போலல்லவா தெரிகின்றது"

ஆமாம், அது தான் உண்மை. பெரியவாளுக்கு இங்கேயுள்ள சாமிமாரிலை நம்பிக்கை இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததாச்சே"

"சரி சரி இந்தக் கதையைக் கதைத்து எந்த இலாபமும் இல்லை. இதை யாரும் கேட்டுக் கொண்டு போய் மடத்துவாசிட்டைப் போட்டுக் குடுத்திட்டாப் பிறகு பிரச்சனையாப் போய்விடும்"

இப்போது புரிகிறது. அது ஒரு ஆச்சிரமாகத் தான் இருக்கவேண்டும் என்று. அப்போ அந்தப் பெரிவர் தாம் முதல்வராயிருக்க வேண்டும். அப்படியானால் பெரியவர் சமாதியடையப் போகிறார் என்பதல்லவோ இவர்கள் பேச்சின் தொனியாக இருக்கிறது. எதற்கும் சென்று பார்த்து விடுவோம் என்று அருகில் சென்றால்....

அடாடா, .. காலைச் சூரியனின் வெம்மையை வடிகட்டி எடுத்து அதற்கு நிலவின் குளிர்மை சேர்த்தது போன்ற ஜீவகளை ததும்பும் முகம். அந்த முகத்தில் வயோதிபம் என்பதைச் சிறிதும் காண்பிக்காது மூடிக் கிடக்கும் இரண்டு தாமரைகள் என விழிகள். மெலிந்த நிமிர்ந்த தோற்றம். இன்னும் இறையடி சேர முடியாது தாமதமாகின்றதே எனும் வருத்தம் காரணமாகச் சற்றே வளைந்த உதடுகள். அவை அசைந்தும் அசையாமலும் சிவநாமம் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ...

சற்று ஓய்ந்த உதடுகள் இப்போது வேறு விதமாக அசைகின்றன.

"முராரி! முராரி!"

(வளர்வான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் குதிரை தொடர்ச்சி.........

அழைத்தான். எசமானனான அவனுக்கு நடக்கும் இந்த வேடிக்கைக் கூத்துக்களை யெல்லாம் கண்டு குமுறிக் கொண்டிருந்த அந்தத் தெய்வீகப் புரவி விரைந்து அவன் முன்னே வந்தது. குரங்கு மனிதர்கள் தளளி விடும் போது தன்னை ஏந்திக் கொள்ளுமாறு கட்டளையிட்டவன் தொடர்ந்தும் மயங்கியது போலவே கிடந்தான். கூச்சல் உசச நிலையை அடைந்ததும் குரங்கு மனிதர்கள் அவனை அலக்காகத் தூக்கிப் பாதாளத்துள் வீசினார்கள். சுந்தருக்கு அடிவயிறு கூசிற்று. மேலிருந்து கீழே விழத் தொடங்கியவனை அதிசயப் புரவி ஏந்திக் கொண்டது. அதன் மீதி இலகுவாய் அமர்ந்தவனைப் பார்த்த குரங்கு மனிதர்கள் ஊவா! ஊவா!.. என்று கத்திக் கொண்டே தரையில் வீழ்ந்து படுத்துக் கொண்டனர். அந்தப் பெரிய அபாயத்திலிருந்து தப்பிப் பிழைத்த ஆனந்தத்தோடு, அதிசயப் குதிரை அவர்கள் கண்ணுக்குத் தென்படாது என்பதால் தான் பறந்து செல்வதாக எண்ணியே அவர்கள் அஞ்சுகின்றார்கள் என்பதையெண்ணித் தனக்குத் தானே சிரித்தும் கொண்டான். அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டவன் திடீரென்று தன் மேல் நிழல் படிவதை அவதானித்து மேலே பார்த்தவன் திகைத்துப் போனான்.

(வளரும்)

---

கணினி உலா

# பாவனையாளர்களே ஜாக்கிரதை தொடர்ச்சி.........

- தொடர்ந்து டைப் செய்வோர் குறைந்தது 15 நிமிடத்துக்கு ஒரு முறையாவது இடைவெளி விடவேண்டும். இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் கைகளையும், கால்களையும் ஓய்வாக இருக்கும்படி வைத்துவிட்டு பணியை தொடரவும்.
- ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை எழுந்து நின்ற கைகளை அசைக்க வேண்டும். மேலும் சிறது நேரம் காலாற நடக்க வேண்டும்.
- மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை எழுந்து சென்று தண்ணீர் அருந்திவிட்டு வேலை செய்யத் தொடரவும். மவுஸை அதிகம் பயன்படுத்தாமல் கீபோர்ட்-சோட் கட்டுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மவுஸ் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் கைகளுக்கு அதிகப்படியான அழுத்தத்தை அளிக்காமல் தவிர்க்கலாம்.
- அதிகம் வேலைப்பளு காரணமாக கேம்ஸ் விளையாடுவதை சிலர் வழக்கமாக கொண்டிருப்பார்கள். இது தவறான செயல். கேம்ஸ் விளையாடும் போது உடல் பாகங்கள், மூளை அதிக அழுத்தத்தில் செயல்படுகிறது. ஏற்கனவே வேலைப்பளுவால் சோர்வடைந்துள்ள உடல் தசைகள் இதன் மூலம் மேலும் சோர்வடைவதால் நரம்பு மண்டல பாதிப்புகள் எளிதாக தாக்கும்.

இவற்றை கடைபிடிக்கத் தொடங்கும் முன்பே பாதிப்புக்கள் நம்மைத் தாக்கத் தொடங்கி விட்டால்... வேலைப்பளு பார்க்காமல் ஒன்றிரண்டு நாட்கள் விடுமுறை எடுத்து ஓய்வு எடுத்து விட்டு பின் மேற்கண்ட வழிமுறைகளை அத்துடன் நரம்பியல் நிபுணரை சந்தித்து ஆலோசனைகள் பெறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல் செல்லும் இடமெல்லாம்.. தொடர்ச்சி.........

திவ்யா... இஞ்சை என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி அதுதான் ஒண்டும் நடக்காமல் நான் பிடிச்சிட்டனே. அழாதயும். ப்ளீஸ் கொண்ரோல் யுவர் செல்ப்... என்றான்.

அருகில் நின்ற ஒருவர்

என்ன பிள்ளை நடந்தது?, ஏன் அழுகிறாய்? என்னெண்டு சொன்னாத் தானே எங்களுக்கும் தெரியும் ... விடுப்பு விளங்கத் தொடங்கினார்.

அவன் சொன்னான் - அது ஒண்டுமில்ல. ஒரு வான் புழுதியக் கிளப்பிக் கொண்டு போகப் தடுமாறிப் பின்னாலை வந்த மோட்டச் சைக்கிள்காரன் தடுமாறித் தட்டிப்போட்டு ஓடிட்டான், அவ்வளவு தான்.

அட இதே சங்கதி என்று அந்த விண்ணாணம் விநாசியார் அகல மற்றவர் களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வசை மாலை சூட்டிக் கொண்டு அகன்றனர்.

திவ்வியா முகத்தைத் துடையும், என்றவனை திவ்யா அப்போது தான் பார்த்தாள். அவன்............

(செல்வோம்....)

## மாதிரி சந்தாப் படிவம்

வேடிக்கை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

ஆறு மாதம் ☐ ரூ. 400  ஒரு வருடம் ☐ ரூ. 800  இரண்டு வருடம் ☐ ரூ. 1500

இனை செலுத்துகிறேன்.

பெயர் : ..................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

தொலைபேசி : ..................................................

நான் இத்துடன் .......................................... இலக்க காசுக்கட்டளையை வேடிக்கை என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திகதி:..........................  கையொப்பம்:..............................

குறிப்பு: பணத்தினை நேரிலோ அல்லது காசுக்கட்டளையாக வேடிக்கை என்ற பெயரிற்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வேடிக்கை,**
**140,நாவலர் வீதி, யாழ்பாணம்.**

இந்த சஞ்சிகை Dream Solutions (Pvt) Ltd. நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 140 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அவர்களின் பணிமனையில் 21-08-2005 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை
## இருவார இதழ்

சஞ்சிகை பற்றிய விபரம்:

| | |
|---|---|
| அளவு: | A5 |
| பக்கங்கள்: | 48 |
| அட்டை: | 4 வர்ணம் |
| உள் பக்கங்கள்: | ஒரு / இரு வர்ணம் |

விற்பனைக்கான பிரதிகள்: 10,000

விநியோக பிரதேசம்: 60% யாழ்ப்பாணம்
20% வன்னி (கிளி, முல்லை, வவுனியா)
10% கொழும்பு
10% ஏனைய மாவட்டங்கள்

### விளம்பர கட்டணம்

| பக்கம் | கலர் | அளவு | கட்டணம் |
|---|---|---|---|
| பின் அட்டை | 4 கலர் | 13.5X20 cm | Rs. 10,000 |
| முன் உள் அட்டை | 4 கலர் | 11.5X18 cm | Rs. 8,000 |
| பின் உள் அட்டை | 4 கலர் | 11.5X18 cm | Rs. 6,000 |
| உள் முழுப் பக்கம் | 1 கலர் | 11.5X18 cm | Rs. 2,000 |
| உள் முழுப் பக்கம் | 2 கலர் | 11.5X18 cm | Rs. 3,000 |
| உள் அரைப் பக்கம் | 1 கலர் | 11.5X9 cm | Rs. 1,500 |
| உள் அரைப் பக்கம் | 2 கலர் | 11.5X9 cm | Rs. 2,500 |
| உள் கால் பக்கம் | 1 கலர் | 6.5X9 cm | Rs. 1,000 |
| உள் கால் பக்கம் | 2 கலர் | 6.5X9 cm | Rs. 2,000 |

**140, Navalar Road, Jaffna.**

**0714 801391**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

nilavu.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com
வெளியீடுகள்
A Member of Dream Solutions (Pvt) Ltd.

# பல்லூடக குறுவட்டுக்கள்

கம்ப்யூட்டர் info
கணினி - இணையம் - நுட்பம்

140, Navalar Road,
Jaffna,
Sri Lanka.
T.P. 0714 801 391

275, யாழ் வீதி,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே : 0777 740413

email : sales@nilavu.com

இப்பொழுது விற்பனையில்

தமிழ் மொழி மூல கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள் நாடெங்கும் விற்பனையில் உள்ளன.
நேரடியாக அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 0714 801 391

MS Office -



Desiging



Multimedia / Hardware -



Programing / e- Books -



Others -



மற்றும்

சிறுவர்களுக்கான தமிழ் கற்க, கதைகள், படல்கள்....

நாடு முழுவதும் விற்பனையாளர்களும் விநியோகஸ்தர்களும் தேவை

இலங்கையில் பல்லூடக குறுவட்டுக்களின் முன்னோடிகள்
-- The King of Multimedia --


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org